[illegible]

V 5 NO 19 12 may 1932


3L
[illegible]211, N128KN
N32.5.19
188967

KALANILAYAM

தனிப்பிரதி விலை, அணு மூன்று

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

5 - JUL 19

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஆண்டு மே மீ 12உ [No. 19

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 361
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 363
3. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A., L.T. 366
4. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 367
5. நாட்டு அன்பு—(ஓர் சிறு நாடகம்)
C. M. R. (அட்வகேட்) B.A., B.L. 369
6. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 371
7. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (முத்தப்பருவம்.) கி. வெங்கடசாமி ரெட்டியார் 373
8. அப்பர் (64 கலை—தர்க்கம்—சப்தப்ரமாணம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 375
9. வர்த்தமானம் 379

## க லா நி ல ய ம்

### வித்தகமோ விதிவசமோ. 11.

**வி**த்தகர்கள்தாம் இன்பமே துய்த்திருப்பார்போல் தோன்றுகின்ற தோற்றத்தின் தன்மையின் நுண்மையாதெனச் சென்றநாள்தெரியக்கூறினோம். போகங்களைப் புசித்திருத்தல் ஒருவருக்கும் புதுமையன்று. மெய்ஞ்ஞான முடையவர்கள் பொய்ப்புலன்கள் புகுத்துநெறி பற்றலாமோ, என்று வாயளவு வியந்து வினவுதற்கே உரிய செய்தியது. முற்பகலில் இன்பத்திற் கிடம்போல் தோன்றிய இச்சிற்றின்பங்கள்தாம், பிற்பகல் விளைகின்ற துன்பங்களுக்கே வித்தாகிக் கிடக்கின்ற உண்மைபற்றியே யன்றோ, இச்சிற்றின்பங்கள் வித்தகத்திற் கொவ்வமாட்டாவெனக் கடியப் படுகின்றன. உள்வாழ்க்கையின்செறிவு திட்பமடைந்திருக்குமாயின், இவைதாம் உட்புகுந்து உழக்குமாறில்லையாதலின், பின்னர் இவைகளாற் பீழை விளைந்திடும் வகையில்லை என்பது எடுத்துக்காட்டலாயிற்று. தாயெண்ணம் ஒன்று தலையெடுத்து வாழ்க்கையின் எல்லாப்பாகங்களையுந் தழுவிக்கொள்கின்ற செய்தியே உள்வாழ்க்கைக்குரியதோர் நல்லிலக்கணம் ஆதலின், வித்தகத்தின் வழித்துணையாகிய இத் தாயெண்ணமொன்றுடையவர் புலன்களாற் புரியப்பெறும் வெளிவாழ்க்கைக் கஞ்சமாட்டார், ஒருநாளும் அதற்குத் தோற்கவும்மாட்டார். இனிதுண்ணேம் ஆரப்பெறேம் என்றுஉழலும் முழுமூடர்களுக்கும், ஐயுணர்வெய்திய பகுத்தறிவாளர்களுக்கும், அதற்கு மப்பாலாய வித்தகப்பெருமக்களுக்கும் உள்ள சில வேற்றுமைகளை முன்னரிங்குக் காட்டியிருக்கின்றோம். அதனில், சத்தவீரமே வித்தகத்தின் சாரமாவது புலப்பட்டிருக்கும். புலன்களுக்குத் தோற்றுடைந்து அடிமையானவன் கயமைமிருந்த மூடன்; புலன்களை நையப்புடைத்துக்கொன்றவன் பகுத்தறிவின் ஆற்றலுடையோன்; மற்று, புலன்களை வென்றடக்கி ஏவல்கொண்ட கொற்றமுடைய வீரன் வித்தகன். புலன்களைக் கொன்றவிக்கும் பகுத்தறிவின் உட்கருத்து என்னவென்று நினைக்கின்றீர்கள்?—அச்சம். ஆதலால் இவர் வெருவிப்பாய்ந்து புலன்களைக் கொல்லப் புகுகின்றனர். அரவினைக் கண்டவிடத்து அடித்துக்கொல்வோனுக்கும் புலியினைக் கண்டவிடத்துப் பிடித்துப் பழக்குவோனுக்கும் உள்ளதோர் வேற்றுமை, பகுத்தறிவுடையோனுக்கும் தாயெண்ணந் தலையெடுத்த வித்தகனுக்கும் இடையே நனியுளது. பாம்பினைக்கொன்றவொருவனை வீர னென்னமாட்டோம்; அச்சத்தால் ஆற்றிய செய்கையது. புலியைப் பிடித்துப் பழக்கப் புகுந்ததன் காரணம், உள்ளிருந்து ஓங்குகின்றவோர் அஞ்சாதவீரமே. வித்தகர் இவ்விதத்தினர். தம் வாழ்க்கை காற்றிற் பஞ்சுபோலும் கடலிற் றுரும்புபோலும் தன்வயமற்று எற்றுமிடந்தோறும் ஏழையாய் மிதக்காமல், உள்வாழ்க்கைக் குரியவோர் தாயெண்ணத்தின் மாண்பினால், வருவனவற்றை யிருந்தேற்றுச் சிறக்கின்ற வீரத்தின் விளம்பரமாக விளங்கச் செய்பவர் இவ்வித்தகர்களே.

இன்பத்திற்குரைத்தஇவை அவ்வித்தகர்தம்துன்பத்திற்கு மொக்கும். இன்ப துன்பங்களை இவர் அநுபவிக்குந் தன்மையில் வேற்றுமையில்லை. எனினும், இன்பதுன்பங்கள் இவர்களை வந்தடையுந் தன்மையிற் சிறிதொரு வேற்றுமை தோன்றலாம். இன்பங்களை இவர் எதிர்கொண்டழைத்துக் கொண்டாடு

பவர்போல் தோன்றுகின்றவர்களாக, துன்பமோ இவர்களைத் தொடர்ந்துவருவதுபோற் றோன்றலாம். எல்லார்க்கும் இச்சொல் ஒக்கு மெனினும் வித்தகர்கள் மாட்டு இஃதோர் தனிச்சிறப் பெய்துகின்றது. பொதுவில், இன்பமென்பதற் குரியவைகளை எய்திய வொருவன், தன் விதியால் அவைதாம் தனக்கு வாய்த்தன வென்றெண்ணி யமைவ தருமை; மற்று, துன்பங்களோ தோன்றுமுன்னரேகூடத் தம் விதியினால் எது வந்து எக்காலத்தில் எய்துமோவென்று துண்ணெனுந் நெஞ்சினராய்க் கிடத்தல் மாந்தர்க்கு இயற்கை. சென்றதுகருதேன் நாளைச் சேர்வது நினையேன் என்ற எண்ணம், பொதுவற நின்ற பெரும்புண்ணியம். ஏனையோரைப் போலல்லாமல் வித்தகர்கள் நாளைச்சேர்வது நினையாம லிருக்கலாமாயினும், துன்பமுடைய விளைவுகள் அவர்மாட்டும் எய்தாமல் ஒழிவதில்லை—இவைகள்தாம் விதியின்செய லென்பதல்லால் வேறுவழியுமில்லை. விதியின் விளைவு இப்படி அவர்மாட்டும் விலக்கரியதாகின்றதென்னின், பின்னர் வித்தகத்தால் பெற்றபயன் யாதென் றுணர்ந்துகொள்வோம். பின், வித்தகமோ விதிவசமோ என்ற ஐயவினை வொழிந்து, விதிவசமே எனப் பிரிநிலைத்தேற்றமே நிற்கவேண்டுமன்றோ!

வித்தகர்கள் ஒருநாளும் வருந்துவதில்லையோ! அவன் வீடு இடிந்து விழுவதில்லையோ. மனைவியும் நண்பர்களும் அவனை வஞ்சிப்பதில்லையோ? அவன் தந்தைதாய், உடன்பிறந்தோர், மக்கள், முதலியோரும் ஏனையோரைப்போன்றே இறத்தல் வேண்டாவா. அவன்மாட்டு வருத்தம் வந்தடையவல்ல வழிகளையெல்லாங் காத்து நிற்கக் கடவுள்கள்தாமே கடமை பூண்டிருக்கின்றார்களோ? லாஸரின் கல்லறைமுன் இயேசுகிறிஸ்துவே கண்ணீர் கலுழ்ந்தாரென்று கூறப்பட்டிருக்கின்றது. புத்தருக்கு வருத்தம் விளைத்தன பலப்பல. தரிக்கலாற்றா வெந்துயருழன்றனன் தயரதன். விதியின் வலியுடைய கைகளால் மோதப்பெறாத தலை எங்குளது? எனின், துன்பந்தான் அணுகவொட்டாமல் வித்தகம் காத்துநின்ற அப்புகலிடத்தின்நிச்சயம் யாவதாயிற்று! இதன்முன் சொல்லியதொன்றும் அமையாதென்று யாம் மறுத்துவிடத்தான் வேண்டுமோ? மனிதர் மதியினை மயக்கும் மாயங்கள் பல. இவைகளில், எத்துணை ஆராயினும் மாயமென்று தோன்றாமல் மெய்ம்மையின் இதயமாம் தண்மையேபோல் விவகரிப்பன சில. இப்பின்னினத்தைச் சேர்ந்ததோர் மாயமேதானோ இவ்வித்தகமும்? பகுத்தறிவிற்கு விரோதமாயிருந்த இவைகளை நாம் விழைந்தமையால் வந்ததோர் தீமையிது என்று பின் அனுபவத்தின் பயனாய் விலக்க வேண்டுவனவற்றிற்கு ஆவாவுகின்ற நம் ஆன்மா, அப்பகுத்தறிவின் முதுகைத் தட்டிக்கொடுத்து 'நல்லதனம்' செய்துகொள்கின்ற புதியவோர் மாயத்தைத் தான் நாம் மாயமென்றறியாமல் இதுகாறும் வித்தகமென்ற பெரும்பெயரினால் விளம்பிவந்தோமோ!—எம்முடைய இக்கட்டுரைகளை துணிகிப் படித்துவந்தவர்களுக்கு இவ்வகையாய ஐயங்கள் பிறப்பது இயற்கையே. எனினும், தோன்றிய ஐயமெல்லாம் முன் சென்றதை அழித்துவிடத் தக்கன ஆகுமோ!

ஒன்றினை உலோவாது உட்கொள்ளுங்கள்—வித்தகர்களும் வருந்தத்தான் வேண்டும். வருந்துகின்றான் அவன்; அவ்வருத்தமும் அவன் வித்தகத்தின் ஓர் அம்சம் ஆகின்றது. உண்மையே நோக்கின், ஏனையோரைக்காட்டிலும் வித்தகன் வருத்தமே அதிகமா யிருத்தல்வேண்டும். எல்லா[illegible]யாய் வழங்குபவன் வித்தகன் ஆதலின் வருத்தங்களும் அவனை முழுமையுறச் சூழ்ந்துகொள்ளும். அதுவுமன்றி, மாந்தரென் றிருப்போர்க்கெல்லாந் தம்மை மிக்க அண்மியராக்கிக்கொண்ட பெற்றியர் வித்தகர்கள் ஆதலின், ஏனையோர் துன்பங்களும் அவ்வித்தகன்தன் துன்பமே யாகின்றமையால், அவனது துன்பங்களின் அளவும் வகைகளும் எண்ணில் பலவாறு பெருகவேண்டுமென்பது இன்றியமையாததாகின்றது. உடல்வேதனையும் மனோவேதனையும் பலப்பல வித்தகனுக்கு விளையாமல் தீர்வதில்லை. வித்தகந்தான் எவ்வளவேயாயினும் விதியுடன் எதிர்வழக்கிட்டு வாதாடமாட்டாத விளைவுகள், ஊனுக்கும் மனத்திற்கும் உயிரிற்கும் உள்ளுணர்விற்கும் நிகழ்கின்றனவென்பது நிச்சயம். இதனை மறுப்பது மதியன்று. இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆதலால், வித்தகன் வந்தெய்துந் தன் வருத்தங்களை வாளா ஏற்றுக் கொள்கின்றானே யன்றித் தாளாண்மையற்றுத் தளர்கின்றான் அலன். வருத்தத்தை ஏற்றுக்கொள்வதன் பொருள்வேறு, அவ்வருத்தத்தால் வருந்துதலென்பதன் செய்தி வேறு. துன்பந்தான் தன்முன் கெஞ்சிக்கெஞ்சிப் பணிவோர்கைகளுக்குப் பூட்டும் விலங்கொன்றும் வித்தகனைப் பிணித்திடாது. "துன்பமே நீ தயைபுரிந்து தொலைந்திடுக" என்றென்றுஅதனை இரந்து வேண்டுவதால் யாதுபயன்! வந்தெதிர் விவகரிக்கின்ற துன்பமே சுயஅதிகாரி—அன்று; அது வேறோர் வல்லரசின் தூதாகவேவருகின்றது. அவ்வல்லரசன் நம் கண்ணிற்குத் தென்படாமல் சற்றே விலகிநிற்கின்றான், அவ்வளவே. அவ்வலியோன் விதியென்னும் பெயரால் நம் வித்தகத்தினை அவ்வப்பொழுது சோதித்து வருகின்றான். இச்சோதனையை இன்பத்தையேனுந் துன்பத்தையேனுந் தூதர்களாயனுப்பிப் புரிவது வழக்கம். இன்பத்தை வித்தகனொருவன் தன் புறவாழ்க்கைக்கே உரிய செய்தியாய் ஏற்றுக்கொள்வான் என்று முன்னர்க் கூறினேம். துன்பத்தையும் அவ்வாறே ஏற்றுக் கொள்வான் வித்தகன். எனின், இன்பத்தில் இன்புறாதது போலவே துன்பத்திலுந் துன்புறாதவன் ஆகின்றான். மற்று, வந்த தூதன் வாளா மீளவே வேண்டியதன்றி வேறு வழியில்லை. அத்துன்பத்தைத் தூதனுப்பிய முதலாளி தோல்வியுற்றவனாகின்றான்.

இதயத்துள் தாயெண்ணம் ஒன்றிருந்து அரசு செலுத்துமெனின், துன்பமெல்லாம் படைதிரண்டு ஒருங்கு மேல் வருமாயினும் நாம் தோல்வியுற்றுத் தொலைந்திடோம். இநிக்கண்கள் நம்முடைய வீரத்தைச் செகுத்தழிப்பதன் முன், நாம் அன்புடன் ஆதரிக்கும்எண்ணங்களின்மீது அவைவெற்றிகொள்ளவேண்டுமே. நம்மிதயமாம் அரியணையில் அமர்ந்த இவ்வாசவெண்ணத்தினை நாமே உருட்டித் தூரத்தரவரையில் புறத்தினின்று வருவதொன்றும் அதனை அசைக்க இயலாது. உடல்நோயால் நலிகின்ற துன்பங்கள் கிடக்க, நம்முடைய எண்ணங்களின் வழியாகவன்றி நம்மைத் தீண்டக்கூடிய துயரம் ஒன்றேனுமில்லை. எனின், நம்மை எதிர்ப்பதும் நமது எண்ணங்களே, நம்மைக் காப்பதும் நமது எண்ணங்களே. நம்மை எதிர்ப்பதற்கும் காப்பதற்கும் ஏற்ற படைக்கலன்களை இவ்வெண்ணங்கள் எங்கிருந்து எடுத்துக்கொள்கின்றன? துன்பத்தாலேயே நாம் அடைகின்ற துன்பம் மிகச் சிறியது. மற்று, தாங்கமாட்டாத் துயரம் பெருலோவதெல்லாம், அத்துன்பத்தை நாம் எவ்வண்ணம் ஏற்றுக்கொள்கின்றோம்என்பதையே பொறுத்து இருக்கின்றது.

[stamp]



# தமிழ்ப் பாடம் 19.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[354-வது பக்கத் தொடர்ச்சி]

வந்த நிலவு அனல்போலத் தமயந்தியைச் சுட்டதென்று இதன்கீழ் வரும் செய்யுள் கூறுகின்றது.

கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்—ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேற் போரச் சொரிந்ததே
நீணிலா வென்னு நெருப்பு. 91.

———

இருளுக்கும் வாடைக்கும் மழைத்தாரைக்கும் தன்னால் தப்பிப்பிழைக்க முடியாதென்று தமயந்தி சோர்வதை அடுத்த செய்யுள் சொல்கின்றது:—

அன்னங்கா ணீங்களுமவ் வாதித்தன் றானும்போய்
மன்னும் படியகலா வல்லிரவின்—மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள்
பிழைத்தால்வந் தேனென்னும் பேர். 92.

———

இவ்வாறு வருந்துகின்ற தமயந்தி தன் தோழிமார்களை ஏசுவதுபோல்தான்நிலவால் வெதும்புகின்றவருத்தத்தைக் கூறுகின்றாள்:—

செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து. 93.

———

பதப்பிரிவு:—செப்பு இளம் கொங்கைமீர் திங்கள் சுடர் பட்டு கொப்புளம் கொண்ட குளிர் வானை இப்பொழுதும் மீன் பொதிந்து நின்ற விசும்பு என்பது என்கொலோ தேன் பொதிந்த வாயால் தெரிந்து.

அன்வயம்:—"செப்பு இளம் கொங்கைமீர், திங்கள் சுடர்பட்டுக் கொப்புளம்கொண்ட குளிர்வானை இப்பொழுதும் தெரிந்து, (உங்கள்) தேன்பொதிந்த வாயால், 'மீன் பொதிந்துநின்ற விசும்பு' என்பது என்கொலோ."

பதவுரை.

செப்பு - செப்பைப் போன்றும்
இளம் - இளமையாயும் (இருக்கின்ற) [களே,
கொங்கைமீர் - முலைகளையுடைய என்தோழிமார்
திங்கள் - சந்திரனது
சுடர் - நெருப்பு
பட்டு - பட்டு [கின்ற இந்த
கொப்புளங் கொண்ட - கொப்புளித்துக் கிடக்
குளிர் - நடுங்குகின்ற
வானை - ஆகாசத்தை, [திலும்
இப்பொழுதும் - நாம் வருந்துகின்ற இக்காலத்
தெரிந்து - (அவை நக்ஷத்திரங்களல்ல, கொப்
புளங்களே என்பது) தெரிந்திருந்தும்,
தேன் - தேன்போன்ற சொற்கள்
பொதிந்த - தங்கிய
வாயால் - (உங்கள்) வாயினால்,
"மீன் - நக்ஷத்திரங்கள்
பொதிந்து - தங்கி
நின்ற - இருக்கின்ற
விசும்பு - ஆகாயம்"
என்பது - என்று கூறுவது
என்கொலோ - என்ன காரணமோ.

விளக்கம்:—தமயந்தி தன் தோழிமார்களை என்னவென்று கூப்பிடுகின்றாள்? கொங்கைமீர் - முலைகளை உடையவர்களே. எப்படிப்பட்ட முலைகளையுடையவர்களே? இளம் கொங்கைமீர் - இளமையான முலைகளையுடையவர்களே. எதைப் போன்றதும் இளமையானதும் ஆன முலைகளையுடையவர்களே என்றழைக்கின்றாள்? செப்பு இளம் கொங்கைமீர் - செப்பைப் போன்றதும் இளமை பொருந்தியதும் ஆகிய முலைகளையுடைய மாதர்களே, என்று தமயந்தி தன் தோழிமார்களை அழைக்கின்றாள்.

அவ்வாறு அழைத்து என்ன கேட்கின்றாள்? என்கொலோ - என்ன காரணமோ, என்று கேட்கின்றாள். எதற்கு என்கொலோ? என்பது என்கொலோ-என்று சொல்வது என்ன காரணமோ. எதனால் என்பது? வாயால் - அவர்களுடைய வாயினால். எப்படிப்பட்ட வாயால்? பொதிந்த வாயால் - தங்கிய வாயினால். எது பொதிந்த வாயால்? தேன் பொதிந்த வாயால் - தேன் போன்ற இனிய சொற்கள் தங்கிய வாயினால். (தேன், என்பது அவர்களது மொழிக்கு உவமையாகுபெயர்).

தேன் பொதிந்த வாயால் என்ன என்பது என்கொலோ? விசும்பு என்பது - ஆகாயம் என்று சொல்வது. என்ன ஆகாயம் என்பது? பொதிந்து நின்ற விசும்பு என்பது-தங்கியிருக்கின்ற ஆகாயம் என்பது. என்ன தங்கியிருக்கின்ற ஆகாயம் என்பது? மீன் பொதிந்து நின்ற விசும்பு என்பது - நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாசம் என்பது.

எதனை உங்கள் வாயின் இனிய சொற்களால் நக்ஷத்திரங்கள் நிறைந்த விசும்பு என்பதற்கு என்ன காரணமோ, எனத் தமயந்தி கேட்கின்றாள்? வானை-ஆகாசத்தை. எந்த வானை? குளிர் வானை-நடுங்குகின்ற ஆகாசத்தை. எந்தக் குளிர் வானை? கொப்புளம் கொண்ட குளிர்வானை-கொப்புளித்து நடுங்குகின்ற ஆகாசத்தை. எதனால் கொப்புளம் கொண்ட வான்? பட்டு. எது பட்டு? சுடர்பட்டு -நெருப்புப்பட்டு. எதன் நெருப்புப் பட்டு? திங்கள் சுடர் பட்டு. சந்திரனது நெருப்புச் சுடர்பட்டு.

சந்திரன் சுடக் கொப்புளித்த ஆகாசத்தை, நக்ஷத்திரம் நிறைந்த விசும்பு என்று எவ்வாறு சொல்வதற்கு என்ன காரணமோ? தெரிந்த - தெரிந்திருந்தும். எப்பொழுது தெரிந்திருந்தும்? இப்பொழுது.

விரிவுரை:—விரகதாபத்தால் மதிகலங்கிய தமயந்தி ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களைக் குறித்துத் "தோழிகாள், அங்கு உருண்டை உருண்டையாய் எழுகின்றனவே, அவை யாவை?" என்று கேட்கவும், அத்தோழியர், "இது அறியாயோ தமயந்தி. அவைதாம் நக்ஷத்திரங்கள். ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றுவது உனக்குப் புதுமை யாவானேன்" எனப் பரிகசித்திருப்பர். அன்னதற்குத் தமயந்தி, "இந்நாள் வரையில் இவ்வுத்தரம் பொருத்தமாய் இருந்திருக்கலாம்; ஆனால் இப்பொழுது, சந்திரனது வெப்பத்தால் நமது உடல்கள் வெந்து கொப்புளம் கொள்வதைக் கண்டு தெரிந்திருந்தும் நீங்கள் பழையபடி அந்தக்கதையைக்கூறுவது தகுமோ. சந்திரனது சுடர்பட்

டதால் ஆகாயத்தில் கிளம்புகின்ற கொப்புளங்களல்லவோ அவை! இனியசொல் உடையீர், உமக்கிது தெரிந்தும் தெரியாதவர்போல் ஏன் பொய்யுரைக்கின்றீர்", என இடித்துரைப்பதாக இச்செய்யுள் செப்புகின்றது.

ஆரணிய காண்டத்தின்கண் அயோமுகிப் படலத்தில், சீதையைப் பிரிந்த இராமன் இவ்விதமே கூறி வருந்துவதை இங்கு ஒப்புநோக்கலாம்:—

அப்புடை யலங்குமீ னமரு மார்கலி
உப்புடை யிந்துவென் றுதித்த வூழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்ப மெய்யெலாம்
கொப்புளங் கொண்டதோ கொதிக்கும் வானமே

என இராமனுக்கங்குச் சந்தேகமாயிருந்தது தமயந்திக்கிங்கு நிச்சயமாயிற்று.

குறிப்பு:—தமிழிலக்கணத்தின்படி சொற்கள்நான்கு விதப்படும். அவை, பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்பன. எழுத்துக்கள், தீ பூ வா போ என்பனபோல் தனியாக நின்றுவது, புலி காடி பேசினான், என்பனபோல் இரண்டும் மூன்றும் நான்கும் அதற்கு மேற்பட்ட எழுத்துக்களும் தொடர்ந்தாவது பொருள் தருமானால் அப்பொழுது சொல் அல்லது பதம் ஆகும், என்று முன்னமே கூறியுள்ளேன். (225வது பக்கம்.) ஓரே எழுத்துத் தனியாக நின்று அர்த்தம் தரும்போது அதற்கு ஓரெழுத்து ஒருமொழி என்று பெயர். ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து அர்த்தம் தருகின்றபோது அப்பதத்திற்கு எழுத்துத் தொடர்மொழி என்று பெயர்.

சொல் என்ற ஒன்று இருந்தால் அதற்கு அர்த்தம் இருக்கவேண்டும். இராமன் பட்டினம் காலை கிளை அழகு பேச்சு, போன்று ஒன்றின் பெயரைச் சொல்லுமானால் அந்தச்சொல் பெயர்ச்சொல் எனப்படும்(210-வதுபக்கம்). அல்லது, வா நின்றான் போவேன் பார்க்க அடித்து, என்று ஒரு தொழிலைச் செய்வதைப்பற்றிச் சொல்லுமானால் அந்தச் சொல் வினைச்சொல். பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் தமக்கென்ற ஒரு அர்த்தத்தை உடையன. ஆனால் தமிழ்இலக்கணத்தில் இடைச்சொல் என்ற ஒருவகைச் சொற்கள் இருக்கின்றன. கு த் ஓ ஓடு உம் அள் மன் அர் இன் கொல், இவைகள் இடைச்சொல்லிற்கு உதாரணங்கள். இவைகளுக்குப் பொருள் உண்டு. ஆதலால் அவை பதங்கள். ஆனால் பெயர் வினைச் சொற்களுக்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசமென்றால், பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தனியாக நின்றாலும் தமக்கென ஒரு பொருள் உடையன (குதிரை என்னும் பெயர்ச் சொல்லும், தூங்கினான் என்ற வினைச்சொல்லும் சுயமாக ஒரு பொருளைத் தெரிவிக்கவில்லையா.) இடைச்சொல்லிற்குத் தான்மாத்திரம் நின்று ஒரு பொருளை உணர்த்துகின்ற சக்தியில்லை. அவை பெயர்ச்சொல்லோடாவது வினைச்சொல்லோடாவது சேர்ந்தே ஒரு பொருள் கொடுக்கும். இதற்குத் தனிஇடம் கிடையாது. பெயர்ச்சொல் வினைச்சொல் இவைகளின் அகத்திலாவது புறத்திலாவது தங்கித் தமக்கு இடமாகக் கொள்கின்றபடியால் இவைகளுக்கு இடைச்சொல் என்ற பெயர் வந்தது. இடை என்றால் நடுவு என்ற பொருள் மாத்திரமன்றி, இடம் என்ற அர்த்தமுமுண்டு. "அவ்விடை ஓடினான்" என்னும் வாக்கியம் அந்த இடத்திற்கு ஓடினான் எனப்பொருள்படும்.

அனேக இடைச் சொற்கள் தமிழில் இருக்கின்றன. அவை பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சேர்ந்து பலவிதமான பொருள்களைத் தரும். ஓ என்பது ஒரு இடைச்சொல். அது பதங்களோடு சேர்ந்து எத்தனைவிதமானபொருள்களைத் தருகின்றது பாருங்கள்.

"உனக்கு மகன் உண்டோ":—இது ஒரு விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு உதவிசெய்கின்ற வினாப் பொருளில் வந்தது.

"உனக்குச் சம்பளம் தூங்குவதற்கோ கொடுக்கின்றேன்":—என்று கேட்டால், தூங்குவதற்கன்று, "வேலை செய்வதற்கு" என, வாக்கியத்தில் இல்லாத சில சொற்களை ஓ என்பது காட்டி நிற்கின்றது. வாக்கியத்தில் இல்லாது ஒழிந்தசொற்களை அது இசைப்பதால், இது ஒழியிசைப் பொருள்.

"இது பொன்னோ பித்தளையோ":—என்ற இடத்தில் ஓ என்பது சேர்ந்து ஐயப்பொருள்(சந்தேகம்) தந்தது.

"இக்காரியம் ஓ ஓ புண்ணியம்:—என்ற இடத்தில் புண்ணியத்தின் சிறப்பைக் காட்டுவதால் ஓ சிறப்புப் பொருளில் வந்தது. அப்படியே, "ஓ ஓ பாதகன்"என்றால் இழிவுப் பொருளைக் காட்டும்.

"அரிச்சந்திரனோ பொய் சொல்வான்" அல்லது "அரிச்சந்திரன் பொய்சொல்வானோ":—என்ற இடத்தில் ஓ என்பது வினாவுமன்று; ஐயமும் அன்று. அவன் பொய் சொல்லமாட்டான் என்று மறுக்கின்றபடியால் ஓ இங்கு எதிர்மறைப் பொருளில் வந்தது.

இப்படி இன்னும் பலபொருள்களும் இதற்குண்டு. அவ்விதமே, ஏ உம் போன்ற இடைச்சொற்களும் பலவேறு பொருள்களைத் தருவதற்கு உதாரணங்கள் அமைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இடைச்சொல்லிற்குத் தனியான பொருள் இல்லையென்றும் மற்றச் சொற்களோடு கூடிப் பொருள்களை விளைவிக்குமென்றும் சொன்னேன். ஆயினும் செய்யுள்களில் சிலசமயம் ஒரு பொருளுமே கொடுக்காமல் இடைச்சொற்கள் வருவதுண்டு. அப்படிப் பொருளே இல்லாமல் வருகின்ற இடைச்சொல்லிற்கு அசைநிலை என்று பெயர்.

கொல், என்பது ஒரு இடைச்சொல். உயிரைப் போக்குகின்ற தொழிலைக் குறித்து வருமானால் அப்பொழுது வினைச்சொல். 'இந்தப் பாம்பைக் கொல்,' என்றபோது கொல் வினைச்சொல். ஆனால் இந்தச் செய்யுளில் என் கோலோ, என வந்திருக்குமிடத்தில், என் + கொல் + ஓ. எனப்பிரிந்து கோல் என்பதும் ஓ என்பதும் இடைச்சொற்கள் ஆகின்றன. அவைகளில் ஓ என்பது வினாப்பொருளில் சிறிது எதிர்மறையும் கலந்து வந்திருக்கின்றது. கொல் என்றதற்கு இங்கு எவ்விதப் பொருளுமில்லை. ஆகையால் அசைநிலை. ஆனால் கொல் என்பதற்குச் சில சமயங்களில் வினாப்பொருளும் சில சமயங்களில் ஐயப் பொருளும் உண்டு. "நாளை நீ வருவாய்கொல்," என்ற இவ் வாக்கியத்தில் கொல் என்பது ஓ என்பதற்குப் பதிலாய் வினாப்பொருளில் வந்திருக்கின்றது. "அங்குக் காண்பது கயிறு கொல், அரவுகொல்," என்ற வாக்கியத்தில் கயிறோ பாம்போ என்ற சந்தேகத்தைக் குறித்து ஐயப்பொரு



ளில் கோல் என்னும் இடைச்சொல் வந்திருக்கின்றது. முன், இவ்வளவிற் செல்லுங்கொல், இவ்வளவிற் காணுங்கொல், என்று 29-வது செய்யுளில் வந்திருக்கின்ற கோல் என்னும் இடைச்சொற்கள் ஐயப்பொருள் உடையன.

---

காணுங் தடங்காவுங் காமன் படைவீடு
வானுந் தேர்வீதி மறிகடலும்—மீனக்
கொடியாடை வையமெல்லாங் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய். 94.

பதப்பிரிவு:—கானும் தடம் காஉம் காமன் படை வீடு வான்உம் தேர் வீதி மறி கடலும் மீன கொடி ஆடை வையம் எல்லாம் கோதண்ட சாலை பொடி ஆடி கொன்றது எல்லாம் பொய்.

பதவுரை.

கானும் - காடும்
தடம் - குளங்களும்
காஉம் - சோலைகளும்
காமன் - மன்மதனுடை (புஷ்பங்களாகிய)
படை - ஆயுதங்கள் இருக்கின்ற
வீடு - வீடுகளாகும்.
வானும் - ஆகாயமும்
தேர் - (காற்றாகிய அவன்) தேர் ஓடும்
வீதி - வீதியாகும்.
மறி - (அலைகள்) புரள்கின்ற
கடலும் - சமுத்திரமும்
மீன - மீன்களையுடைய (அவனது)
கொடி ஆடை - கொடித்துணி.
வையம் - பூலோகம்
எல்லாம் - முழுவதும்
கோதண்டம் - (அவன்) வில்வித்தை பழகுகின்ற
சாலை - இடம். (ஆகையால்)
பொடி - சாம்பலை
ஆடி - பூசிக்கொண்டிருக்கின்ற சிவபிரான்
கொன்றது - அவனைக் கொன்றுவிட்டான் என்றுசொல்வது
எல்லாம் - முழுவதும்
பொய் - பொய்யே.

விரிவுரை:—இந்தச் செய்யுளில் தமயந்தி மன்மதனைப்பழிக்கின்றாள். பரமசிவன் நெற்றிக்கண்ணைத்திறந்து மன்மதனை எரித்துக் கொன்றுவிட்டார் என்பது யாவரும் அறிந்தது. ஆனால் இந்நாள் மன்மதன் தன்னைப் படுத்திவைக்கின்ற கஷ்டத்தைக் காணுங்கால், அவன் செத்துவிட்டான் என்று எப்படிச்சொல்வது, என்று தமயந்திவருந்தி, சிவபிரான் அவனைக் கொன்றனன்என்னும் வதந்தியை மறுக்கின்றாள். அதுமாத்திரமன்றி மன்மதன் இன்னும் இருக்கின்றான் என்பதைக் காட்டுகின்ற அடையாளங்களும் நிகழ்கின்றனவாதலால் அவன் செத்ததில்லை என்று பின்னுஞ் சாதிக்க அவளுக்கு இடம் ஏற்படுகின்றது.

இந்தச் செய்யுளின் பொருள் விளங்குவதற்கு மன்மதனைச்சார்ந்த சில செய்திகளை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். மன்மதன் உருவு இல்லாதவன். அவனது வில் கரும்பு. அவனுக்கு அம்புகள் ஐந்து. அவையும் மலர்களே. அம்மலர்கள்;—முல்லை தாமரை. நீலோற்பலம் மா அசோகு, ஆவன. அவனுடைய வில்லிற்கு நாண் வண்டுகள். (இவைகளை, கரும்புவில் சுரும்புநாண் அரும்புக்கணை என ஞாபகம் வைத்துக் கொள்ளலாம்). அவனுடைய தேர் தென்றல்காற்று. கிளியே குதிரைகள். வாளும் தாழம்பூ. அவனுக்குரிய கொடி மீனக்கொடி. அவனது குடை சந்திரன். அவனுடைய சேனை மாதர்கள். மன்மதனால் எதிர்க்கப்படாதவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லையாகையால் பூலோகம் முழுவதுமே அவன் போர்செய்கின்ற இடமாகின்றது.

இவைகளுள் சில இருப்பதாகக் காட்டி, மன்மதன் இறந்தனன் என்றகதையை மறுக்கின்றாள். எவ்வாறெனில்:—காடும் குளமும் சோலையும் இருக்கின்றவரையில் அவனுடைய ஆயுதச்சாலையும் இருக்கின்றது. ஆயுதச்சாலை என்பது போர்க்குரிய அம்பு முதலானவைகளை வைத்திருக்குமிடம். அவனுடைய அம்பு ஐந்து மலர்கள். அவ் வைந்துமலர்களில், காட்டில் இருப்பது முல்லை, குளத்தில் இருப்பன தாமரையும் நீலோற்பலமும், சோலையில் இருப்பன மாம்பூவும் அசோகும்.

அவனுடைய தேர் ஆகிய காற்று ஓடுகின்ற வீதியாகிய வானமும் இருக்கின்றது. மீன் எழுதிய அவனுடைய கொடிச்சீலையேபோல் மீன்கள் நிறைந்த கடல் அலைந்துகொண்டிருக்கின்றது. அவன் வில்வித்தை பயில்கின்ற இடமாகிய உலகம் இருக்கவே இருக்கின்றது. ஆதலால் அவன் சாகவில்லை என்பது தமயந்தியின் கொள்கை.

காமநோய் அடைந்திருப்பவர் தென்றல்காற்றுப் பட்டால் பொறுக்கமாட்டார். அதுவும் அக்காற்றுக் குளங்களிலிருந்தும் சோலையிலிருந்தும் குளிர்ந்து வீசினால் பின்னும்பெரிது வருந்துவார். மலர்களின்வாசனையும் கலந்து அக்காற்று வீசுமானால் அவர்களுக்கு வேதனை இன்னுமோர்படி அதிகமாகும். ஆதலாற்றான் மலர்கள் இருப்பதும் குளிர்ச்சிதருவதுமாகிய காட்டையும் குளத்தையும் சோலையையும் இவள், மலர்கள் இருக்கின்ற காரணத்தால் படைவீடாக அமைந்ததற்கு மாத்திரமல்லாமல், தென்றலின் கொடுமையை அதிகமாக்குவதற்காகவும் அவைகளைச்சிறப்பாய்எடுத்துச் சொல்லிப் பழிக்கின்றாள். இப்படியே சீதையும்,

"கயங்க ளென்னுங் கனறோய்ந்து
கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவேள்
எய்த புண்ணி னிடைநுழைய......"

என்று தன் ஆற்றாமையைச் சொல்லிப் புலம்பக் கம்பராமாயணத்தில் காணலாம்.

"செப்பிளங் கொங்கைமீர்" எனத்தொடங்கும்முன்னைய செய்யுள் தமயந்தி சந்திரனால் வருந்தினாள் என்பதைக்காட்டுகிறது. இச்செய்யுள் தென்றல் காற்றினாலும் கடலின் ஒலியாலும் மன்மதனது செய்கையாலும் வருந்தினாள் என்பதைக் காட்டுகிறது. ஒரு விஷயத்தை எளிதாகக் கூறிவிடாமல், திறம்படப்புனைந்து கேட்போர் வியந்து மகிழும்படி கூறுவது அணி அல்லது அலங்காரம் ஆகுமென்று முன்னே கூறியுள்ளேன். உவமை அணி, உருவக அணி, ஒழித்துக் காட்டணி. உயர்வுநவிற்சியணி தற்குறிப்பேற்றவணி முதலிய அணிகளைப்பற்றிக் கற்றதை மறந்திருப்பீர்களானால் மறுபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

இவ்விரு செய்யுள்களிலும் அமைந்திருக்கின்ற அணி, ஒழிப்பணி. இதன் இலக்கணம், உண்மையான ஒன்றை மறுத்து ஒழித்து, 'அதுவன்று' என்றுவது,

'வேறு ஒன்று' என்றுவது, சாமர்த்தியமாய்ச் சொல்வதாம். உண்மையான ஒன்றை ஒழித்துவிடுவதால் இதற்கு ஒழிப்பு அணி, என்னும் பேர் வந்தது.

முன்செய்யுளில், வானத்தில் தோன்றுவன நக்ஷத்திரங்கள் ஆவது உண்மையாயிருந்தும் அதை ஒழித்து, கொப்புளங்கள் என்று வேறு ஒன்றாகக் கூறியபடியால் அது ஒழிப்பணி. இச்செய்யுளில் சிவபிரான் காமனைக்கொன்றது நிச்சயமாயிருந்தும் அதை ஒழித்து அவன் சாகவில்லை என்று சாதிப்பதால் இதுவும் ஒழிப்பணி. வந்த இடத்தில் இவ்வணியைத் தெரிந்து கொள்வது வெகு சுலபம். இந்த அணிக்கு அவனுதியணி என்ற பேரும் உண்டு.

நைடதத்தில், தமயந்தியை நளனிடத்திலே வர்ணிக்கின்ற அன்னம் இந்த ஒழிப்பணியைக் கையாள்கின்றது. அதன் கருத்துப் பின்வருமாறு:—"சந்திரனிடையிலே கருமையாய்த் தோன்றுவதை அதன் களங்கம் என்றன்றோ இன்னமும் இவ்வுலகத்தார் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அது தவறு. தமயந்தியின் முகத்தை அமைப்பதற்காகப் பிரமதேவன் சந்திரனிலிருந்து வழித்துவழித்து எடுத்துவிடவே அந்தத் துவாரத்தின் வழியாய்ப் பின்னிருக்கும் ஆகாயம் நம் கண்களுக்குத் தென்பட, அதைப் பார்த்துச் சந்திரனில் படிந்திருக்கும் மாசு என்று நினைத்துக் கொள்கின்றோம்."

சந்திரனின் களங்கம் உண்மையாயிருக்க அதை மறுத்தொழித்து வேறு ஒன்று என்று கூறுவதால் இது ஒழிப்பணியாயிற்று. இவ்வணியை ஒழித்துக் காட்டணியுடன் மயங்காதீர். அது முற்றிலும் வேறாய இலக்கணமுடையது. (24-வது பக்கம்)

## குன்றுடையானும் மக்களும்

### இரண்டாம் புத்தகம் — 2. அண்ணன்மார் கலியாணம்

[344-வது பக்கத் தொடர்ச்சி]

தாய்தந்தையர்கள் காலஞ்சென்றபின் ஒருநாள் தங்கை அண்ணன்மாரை நோக்கி, 'நம் தாய்தந்தையர் பரலோகம் புக்கனர். நீங்களோ விவாகம் செய்துகொண்டீர்கள். அண்ணியரும் இங்கே வந்துள்ளார். அத்தை பிள்ளைகளாகிய மைத்துனர்களும் உங்களோடுகூடவே இங்குஇருக்கின்றார்கள். நாட்டார்கள் தம்வழக்குகளை உங்களிடம் சொல்லிக்கொள்ள வருவார்கள். நீங்களும் கண்டபடி பேசுவீர்கள். நான் உங்கள் பக்கலிலிருந்து அவர்கள் சொல்லும் வழக்குகளையும் உங்கள் பேச்சுக்களையும் கேட்டல் ஒண்ணாது. நான் புரியும் கடவுள் தொண்டுக்கும் சிவபூசைக்கும் அவைகள் இடையூறாகும். ஆண் மக்கள் இருக்குமிடத்தே வசித்தலையும் நான் விரும்பவில்லை. ஆகையால், எனக்குத் தனியாக ஒரு மாளிகை நிருமித்துக்கொடுப்பீரானால் நான் தனித்து வசிப்பேன்' என்றாள்.

அண்ணன்மார், 'அம்மா, தங்கையே, நீ சொல்வதற்கு முன்பே நாங்கள் இதைச் செய்திருத்தல்வேண்டும். உன் கருத்தின்படியே உனக்குத் தனி மாளிகை கட்டுவிக்கின்றோம்' என்று சொல்லி எழுந்துபோய், நல்ல முகூர்த்தம் குறித்து அம்முகூர்த்தத்திலே கொற்றர்களையும் தச்சர்களையும் கொல்லர்களையும் அழைப்பித்து, முன்னூறு ஆட்களையும் விடுத்து ஏழு சுற்றுகிய ஒரு மாளிகை கட்டும்படி நியமித்தார்கள்.

அவ்வேலையாட்கள் ஊருக்கு அப்பால் ஒரு தக்க விசாலமான இடத்தை வகுத்து, அடியளந்து, முழமளந்து, நூற்பிடித்து, ஆறுமாதம் அல்லும்பகலும் இடைவிடாது வேலைசெய்து, ஏழுமுகப்பு வாசல்களும் ஐந்து தளங்களும் பொருந்திய ஒரு விசித்திரமாளிகை கட்டினார்கள். அம்மாளிகையிலே ஆஸ்தான மண்டபமும் பந்தாடுமேடைகளும் சித்திரகூடங்களும் இடையிடையே பூந்தோட்டங்களும் தண்மை பரப்புகின்ற நீரூற்றுக்களும் பாங்கியர் விடுதிகளும்நீராடுமண்டபங்களும் படுக்கையறைகளும் தளத்துக்குத் தளம் குதித்தோட மிதியலகைகளும் அமைந்திருந்தன.

அம்மாளிகையின் நடுவண், தங்காள் வசிக்கும் மண்டபத்திலே, சித்திரப் போதிகைகளைத் தாங்கும்படி வரிசையாய் நிறுத்திய தூண்களிலே தூணுக்குத்தூண் தூண்டா மணிவிளக்கு அசையும்; சலவைக் கல்லாற் செய்த தளத்திலே உதித்த கதிரதுபோல் தூணின் நிழலாடும்; குயிலும் கிளியும் இனிய தமிழ்பாடும் அம் மண்டபத்தின் மத்தியில் அன்னவடிவப் பொன்னூஞ்சல் ஒன்று தொங்கும். அவ்வூஞ்சலிலே, அஞ்சனைப் பஞ்சுமெத்தையும் சரிகையாற்செய்த ஒற்றைத் தலையணையும் சாய்வதற்குப் பட்டுத்திண்டும் போடப்பட்டிருக்கும்; அங்கே சாந்தினால் தரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டிருக்கும். சுவர்களில் திருவாலவாயான் திருவிளையாடல் அறுபத்துநான்கும் சித்திரிக்கப்பெற்றிருக்கும். இம்மண்டபத்திற்கு மேலே, பளிங்கினாற் செய்தவொரு சிறிய சிவன் கோயிலும் அந்தக் கோயிலின் முடியிலொரு தங்கக்கலசமும் இருக்கும். கோவிலி னுட்புறத்தே திருநீற்றுமணமும் கருப்பூர வாசனையும் நீங்காமல் வீசும். இரவும் பகலும் அங்கே ஒரு குத்துவிளக்கு எரியும். அம்மாளிகையில் ஒவ்வொரு சுற்றிலும் காவல்செய்வோர் யாவரும் பெண்டிரே. அங்கே ஆண்காற்று வீசுதலும் கூடாது. தங்கைக்குக் குற்றேவல்புரிய அவளை நீங்காதிருப்போர் பதினெல்வர் தாதியர். அம்மாளிகைக்கு முதற்காவலாய் இருந்தது மூளியென்னும் பெயரியவொரு பெட்டைநாய். அது குன்றுடையானால் போற்றி வளர்க்கப் பெற்றது. அதன் உயரம் ஆறு முழம். அது கூரிய அறிவும் புலியின் வீரமும் வாய்ந்தது. அதற்குத் தங்காள் அரண்மனையில் வாய்விட்டுக் குரைக்கத் தருணம் கிடைப்பதில்லை. அது குரைக்குமாயின் அவ்வொலி அரைக்காதம் கேட்கும்.

இம்மாளிகையில் உறையும் தங்காள் அன்பும் அழகும் திரண்டு ஓர் உருக்கொண்டது அனையவள்; எப்பொழுதும் சிவநாமத்தை உச்சரிப்பவள்; நெற்றியிலும் கழுத்திலும் திருநீறணிந்தவள். காலையில் எழுந்து நீராடித் துகிலுடுத்துத் திருநீறணிந்து பூக்கொய்து உச்சிப்பொழுதாமளவும் சிவபூசை செய்பவள்; ஒருபொழுதுண்பவள். பூசைமுற்றியபின் அன்னவடிவப்



பொன்னூஞ்சலிலே, அஞ்சனைப் பஞ்சு மெத்தையிற் கிடந்து கண்மூடிச் சிவநாமத்தை உச்சரித்து, எதிர்கால நிகழ்ச்சிகளைக் கனவிற்கண்டு சொல்பவள்; தாதியரோடு பந்தாடியும் பூசைக்குப் பூப்பறித்தும் மாலைப்பொழுதைப் போக்குபவள்; இரவில் பாதியாம மாகுமளவும் தனக்கென்று நியமித்த கோயிலிலே மீண்டும் சிவபூசை புரிபவள்; இரப்போர்க்கு இல்லையென்னாது கொடுப்பவள்; வீண்பொழுது போக்கும் வெற்றுரையும் இல்லாத வீரகன்னிகை. அவள் அவிழ்த்துவிட்ட கூந்தல் நிலத்திற் புரளும். அவள் பேரழகு வாய்ந்தவளாயினும் பிறர்மனத்துட் புகுதலில்லாத் தூய்மையினள். அவள் வளர்க்கும் குயில்களும் கிளிகளும் புள்ளிமான்களும் அவளைவிடாதுதொடர்ந்துதிரியும். அவள் ஓரிடத்தில் நின்று கைதட்டுவாளாயின் ஆங்குறையும் குயில்களும் கிளிகளும் பொள்ளெனப் பறந்துவந்து, ஒன்றன்மேலொன்று வீழ்ந்தும் ஒன்றற்கொன்று முந்துற்றும் அவளது தலைமீதும் தோள்மீதும் மார்பின் மீதும் உட்காருவதற்குப் போதியஇடம்பெறுமையாற் பொறுமையுற்றுக் கலகம் விளைத்தலைக் கண்டு, அவள் புன்னகை புரிந்து, அவற்றைத் தன் மெல்லிய கரங்களாற் பற்றி முத்தமிட்டுக் கொஞ்சுவாள். அவள் அருமையாய் வளர்த்த பறவைகளுக்கும் மான்களுக்கும் சிவநாமங்களையே சூட்டியிருந்தனள். அன்னாள் தன் அண்ணன்மாரிடத்துக் கொண்டிருந்த அன்பு அளப்பரிது. அண்ணன்மாரும் அவளைத் தங்கள் உயிரினும் அருமையாய்ப் போற்றிக் கண்ணைக் கண்ணிமைகள் காப்பதுபோல் காத்தனர். அவர்களுக்கு அவளிட்டது சட்டம்.

தங்காளுக்குமாளிகைகட்டி முடித்தபின் அண்ணன்மார் தம் தந்தை கட்டியிருந்த அரண்மனை, தங்களுக்குப் போதாதென்று கண்டு, தமக்கேற்றவாறு சிலம்பக் கூடத்தையும் கச்சைகட்டும் சாவடியையும் வாள்சாத்துமண்டபத்தையும் ஆனைகட்டும் இலாயத்தையும் குதிரைகட்டும் கொட்டிலையும் வீரசாம்பான் காவலிருக்கக் காவற்கூடத்தையும் சூதாடு மண்டபத்தையும் புதிதாகக் கட்டுவித்துப் பழைய அரண்மனையை விசாலப்படுத்தினர்.

சிலம்பப் பயிற்சியே அண்ணன்மாருக்கு முதற்பொழுதுபோக்காய் இருந்தது. அவர்களுடைய வாள்சாத்து மண்டபத்திலே, இருப்புலக்கைகளும் வெள்ளிக்கட்டு வேல்களும் ஈட்டிகளும் பல்வகை வளைதடிகளும் சுழல்தடிகளும் அக்காலத்தில்வழங்கிய பலவகை வாட்களும் கேடயங்களும் அணியணியாய்ச் சுவர்களில் தொங்கவிட்டிருந்தன. சிலம்பக் கூடத்திலே ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அண்ணன்மாரும் மைத்துனரும் வீரசாம்பானும் வில்வித்தை வாள்வித்தை தடிசுழற்றல் முதலிய படைக்கலப் பயிற்சிகளையும் உடற்பயிற்சிகளையும் நெடுநேரம் பயில்வார்கள். இந்தப்பயிற்சி நடைபெறுகையில் படைக்கலத்தோடு படைக்கலம் மோதி யுண்டாகும் ஓசையும் வீரர்கள் கொக்கரித்தும் ஆர்ப்பரித்தும் நெருங்கிப் பொருகையில் உண்டாகும் ஓசையும் ஊருக்கப்பால் நெடுந்தூரமளவும் கேட்கும். இவ்வீரர்கள்படைக்கலப் பயிற்சி முடிந்தபின் பந்தயமிட்டுக் குதிரை ஊர்வார்கள். பின்பு அவர் உண்டிமுடித்து மைத்துனர்களுடன் சூதாடி மிகவும் மகிழ்வார்கள். சிற்றூலைப்பட்டணத்திற்கு மேற்கேயுள்ள வீரமலைக் காட்டிற்கு அண்ணன்மார் அடிக்கடி வேட்டையாடப் போவதுமுண்டு.

இங்ஙனம் நாட்கள் சில கழிந்தன.

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[346-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—9-ம் தசகம்.

6-ம் பாசுரம்.

மகிழ்கொள் தெய்வ முலோக மலோக
மகிழ்கொள் சோதி மலர்ந்த வம்மானே
மகிழ்கொள் சிந்தைசொற் செய்கைகொண்டென்று
மகிழ்வுற் றுன்னை வணங்க வாராயே.

அவதாரிகை:—சென்றபாசுரத்தில் எம்பெருமானது திருவவதார சேஷ்டிதங்களையும் கல்யாண குணங்களையும் மறந்திடாமல் எப்போதும் தாம் அநுபவிக்க வேண்டுமென்றார். இதனிலும் அடுத்த பாசுரத்திலும் தாம் இருக்குமிடத்துக்கு எம்பெருமான் எழுந்தருளித் தமக்கு இவ்வின்பங்களை ஊட்டவேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

குறிப்புக்கள் :—உலோகம் - கண்களால் பார்த்துத் தெரிந்துகொள்ளக்கூடியது - அதாவது தேவன் மனுஷன் மலை மரம் என்று ஸ்தூலமாய்ப் புலப்படும் அசேதனங்கள். அலோகம் - கண்ணால் பிரத்தியக்ஷிக்கக்கூடாத மனுஷர் தேவர்கள் இவர்களின் ஆத்ம வஸ்துக்கள். மகிழ்கொள் ஜோதி = ஆநந்தமே உருவமெடுத்தாற்போலுள்ள ஸூரியசந்திராதிகள். மலர்ந்த அம்மானே - மேற்சொன்ன இவைகளின் வடிவமாய் யுகப்பிரளயம் முடிந்தவுடன் சிருஷ்டியாதிகளாய்த் தாமே அமைந்த ஸர்வசுவாமியே, உன்னிடத்திலேயே வீழ்ந்துகிடக்கும் சிந்தையையும் வார்த்தைகளையும் மற்றுமுள்ள காயக்கிரியைகளையும் உடைய நான் எப்போதும் ஆநந்தப்பரவசனாய் உன்னை வணங்க வாராய் - நீ எழுந்தருளவேணும்.

7-ம் பாசுரம்.

வாரா யுன்திருப் பாத மலர்க்கீழ்
போரா தேயான் வந்தடை யும்படி
தாராதா யுன்னை யென்னுள் வைப்பிலென்று
மாரா தாயெனக் கென்றமெக் காலே.

"உன்னுடைய நிரவதிக போக்கியதையை - இரஸமாயும்உகப்பாயும் அநுபவந் தரக்கூடியதை எனக்குக் காட்டிவைத்து உன்னைப் பூஜிக்கத் தாராதிருக்கிற நீ, ஸர்வகாலமும் உன் திருப்பாத மலர்க்கீழ் போராதே யான் வந்தடையும்படி பிரானே, வாராய் என்கிறார்" — ஆறுயிரப்படி.

8-ம் பாசுரம்.

எக்காலத் தெந்தையா யென்னுள் மன்னின்மற்
றெக்கா லத்திலும் யாதொன் றும் வேண்டேன்
மிக்கார் வேத விமலர் விழுங்குமென்
னக்காரக் கனியே யுன்னை யானே.

குறிப்பு:—அக்காரக் கனி—கரும்பின் வெல்லமே ஓர் விருக்ஷமாய் உருவெடுத்துப் பழம் பழுத்த கனி.

"எக்காலத்தும் என்னைக்கொண்டு எல்லா அடிமையும் செய்வித்துக்கொண்டு என்னுள்ளே ஸ்திரமாய் நின்றாயானால் பின்னை உன்பால் ஒருகாலத்திலும் இப்போது நான் அபேக்ஷிக்கும் கைங்கரியமன்றி வேறே எந்தப்பிரயோஜனமும் அபேக்ஷிக்கமாட்டேன். கன்னற்கட்டியைச் சுவைத்து அநுபவிப்பதுபோல்உன்னை அநுபவிப்பர் எல்லாமுணர்ந்தவேதவிமலர் அல்லரோ? எனக்கு அங்ஙனம் வாய்க்குமோ?

குறிப்பு:—எந்தையாய் = புத்திரன் செய்யும் கைங்கரியங்களை நீ வாத்ஸல்யத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று; நான் = இவ்வண்ணம் கைங்கரியம் செய்யும் பாக்கியமுள்ள நான்.

---

9-ம் பாசுரம்.

யானே யென்னை யறிகி லாதே
யானே யென்ற னதேயென் றிருந்தேன்
யானே நீயென் னுடைமையு நீயே
வானே யேத்தும் வானவ ரேறே.

"நானு மென்னுடைமையு முனக்கே யடிமையாயிருக்கச்செய்தே, இதற்குமுன்போல, காலமெல்லாம் உனக்கடிமையென்னும் இடத்தையறியாதேயானென்றும் என்னுடையதென்றும் உண்டான ஸ்வாதந்தரிய அபிமானத்தாலே நஷ்டனானேன் என்று தம்முடைய இழவை அநுஸந்தித்து அத்தியந்தம் துக்கமுடையவராய் ஸ்பாவத்தாலே கலங்காத ஞானத்துடன் எம்பெருமானை ஒரு க்ஷணமாத்திரமும் இழவாதே திருநாட்டிலிருந்து அநுபவிக்கிறவர்கள் யாரோ" என்கிறார்—ஆறாயிரப்படி.

குறிப்பு:—இதுவரையில் நடைபெற்ற துர் அபிமானம் கழிந்து இனியாவது யானும் என்னுடையதும் உனக்கே உதவ உள்ளனவென்று தெரிந்துகொண்டு செய்யவேண்டு மென்றபடி.

---

10-ம் பாசுரம்.

ஏறே லேழும்வென் றேர்கொ ளிலங்கையை
நீறே செய்த நெடுஞ்சுடர்ச் சோதி
தேறே னென்னையுன் பொன்னடிச்சேர்த் தொல்லை
வேறே போக வெஞ்ஞான்றும் விடலே.

குறிப்புகள்:—ஏறேல் - ஏறு + ஏல். ஏல் - அசை. ஏர் - ஸௌந்தரியம். ஒல்லை - உடனே. தேறேன் - தரித்து நிற்கமாட்டேன்.

"இப்படி நிச்சயஞானம் வேரூன்றி நிற்கவும் கைங்கரியம் சபலமாகவும் இடையூறாய்ப் பிரதிபந்தங்களில்லையோவென்ன, இவைகளை எல்லாம் நப்பின்னை பிராட்டிக்கும் சீதாபிராட்டிக்கும் நீயே அவர்களோடு கலக்கும்பொருட்டு நிவர்த்தித்துப் போக்கவில்லையோ. ஏழு ரிஷபங்களை ஜெயித்து நப்பின்னை பிராட்டியை மணந்துகொள்ளவில்லையோ? சீதாபிராட்டியின் நிமித்தம் அழகான இலங்கையைத் தஹித்து அவளைச் சிறை மீட்கவில்லையோ? ஆனதுபற்றி என்னையும் உன் திருவடிகளிலே அத் திருவடிகளிலுள்ள ரேகைகள்போல் பின்னை ஒருக்காலும் பிரிவில்லாதபடி உடனே சேர்த்து அருள்செய்யவேண்டும். இப்படிச் செய்யாவிடில் கோழைப்பட் டிறப்பேன்."

---

11-ம் பாசுரம்.

விடலில் சக்கரத் தண்ணலை மேவல்
விடலில் வண்குரு கூர்ச்சட கோபன்சொல்
கெடலில் லாயிரத் துள்ளிவை பத்துங்
கெடலில் வீடுசெய் யுங்கிளர் வார்க்கே.

குறிப்புக்கள்:—விடலில்-விடுதல்-அதாவது வேண்டாம் என்று உபேக்ஷித்து விடுதல் இல்லாத. சக்கரத் தண்ணல் - சக்கராயுதாழ்வாரை ஒரு க்ஷணமும் விடாதேபிடித்துத் தன்வசத்தில் வைத்துக்கொள்ளும் சுவபாவனான எம்பெருமானை. மேவல்-கூடுதல். விடலில்-விடாதவரான; வண்குருகூர்ச் சடகோபன். சொல் - சொன்ன. கெடலில்-கேடுஇல்லாத. ஆயிரத்துள் இவை பத்தும் கிளர்வார்க்கு - மேலுக்குமேல் பிரயத்தனப் பட்டுப் பக்தியில் எழும்புவார்க்கு. கெடலில் - சுவதந்தரபுத்தியால் உண்டாகும்சுவரூப நாசமும் பிரமங்களும் இல்லாத, வீடு - நிஜ தத்துவரூபமான இத்தசகத்தில் ஆழ்வார்பெற்ற பெரும்பேற்றை; செய்யும்-சாதித்துத்தரும்.

ஆழ்வார் பட்டசங்கை எம்பெருமானுக்குச் சுபாவத்தில் இல்லை. அவன் பக்தர்களை ஒருக்கணமும் விடமாட்டான். ஆழ்வாரும் அவனை ஒருவாறு தொண்டு புரிவதில் விளம்பம் வருகிறதேயென்று சங்கைப்பட்டு மன வியாகூலப்பட்டாலும் ஸ்வபாவத்தில் அவனை விட்டுத் தரித்து நிற்க ஏலாதவர் என்று தாமே விண்ணப்பம் செய்கிறார்.

இச்சந்தர்ப்பத்தில் ஆழ்வாருக்கு எம்பெருமானது கலவை ஏற்பட்டதாக இப்பாசுரத்தால் தெரிகிறது. எப்படி என்று அடுத்த தசகத்தின் முதலில் ஏற்படும்.

இந்த ஒன்பதாம் தசகத்தில் எம்பெருமானுக்கு ஆச்ரிதரிடத்தில் பற்று விடாமலிருத்தல், அவர்களுக்கு, நாமென்றும் எமதென்றும்உள்ள விபரீதஞானத்தைத் தவிர்த்துத் தமக்கே கைங்கரியம் செய்வித்துக் கொள்வதே அவனது கோரிக்கையும் ஆசையும் ஆகும் என்று ஆழ்வார் கற்பிக்கின்றார்.

---



# நாட்டு அன்பு

விடயச் சுருக்கம் :—

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரஞ்சுக்காரர்கள் ஜெர்மனியின்மீது படையெடுத்து அந்நாட்டை அழித்து மக்களைத் துன்புறுத்தினர். அக்கொடுமைகளைச் சகிக்காத ஒரு ஜெர்மனிய குடியானவன், ஸ்டப்ஸ் (Stubbs)என்பவன்,பிரான்சியர் அதிபதி நெப்போலியனைக் கொலைசெய்யக்கருதி அவன் இருப்பிடத்தை அணுகி, கொலைபுரிய எத்தனிக்கையில் பிடிபட்டுச் சிறையில் அடைபட்டான். இரண்டு ஆண்டுகள் சிறையில் கேள்வியின்றி வருந்துகையில் அவன் அணிந்திருந்த உடை கிழிந்து கந்தலாகிவிட்டது. சிறைகாப்போன் அவன்மீது பரிதாபப்பட்டு ஒரு புதுஉடை கொண்டுவந்து கொடுத்தான். அதை ஜெர்மானியன் உற்றுப்பார்த்துவிட்டு, அது எந்நாட்டு உடை என்றான். பிரான்ஸில்நெய்தஉடை யென்றலுமே தனக்குவேண்டியதில்லை என்றான. காரணம் கேட்க, தன் நாட்டுக் குற்றமற்ற குடிகளைத்துன்புறுத்தி இரத்தம்சிந்திய பிரான்சியர் கையினால் செய்த துணியை அணிவதைக் காட்டிலும் நிர்வாணமாய் இருப்பதே மேல் என்றான். இவ்வார்த்தை நெப்போலியன் காதுக்கு எட்ட, சினமிகுந்து அவனைத் தூக்கிலிடும்படி கட்டளையிட்டான். அக் கடுந்தீர்ப்பைக்,கேட்ட ஜெர்மானியன் மிகுந்த உற்சாகத்துடன் 'எனது நாட்டிற்கு நான் என்உயிரை அர்ப்பணம்செய்யும்சமயம் வந்தது' என இன்புற்றான். ஆனால் இறந்த பின்பு தன் உடலை ஜெர்மன் துணியில்வைத்து அடக்கம் செய்யவேண்டும் என்று வேண்டினான். மரண நாளன்று ஈசனைப் பிரார்த்தித்துக் கொலைமேடை ஏறி, தானே சுருக்கிட்டுக்கொண்டு, "ஜெர்மனி வாழ்க" எனக்கூவி 'ஜெர்மன் துணியால் என்சவம்' எனச் சொல்லிக்கொண்டே ஆருயிர் விட்டான். இதைக்கேட்ட நெப்போலியன் கண்ணீர்விட்டு அப்படியே ஜெர்மன் துணியுடன் அவனை அடக்கம்செய்ய உத்தரவுசெய்தான்.

காட்சி 1

சிறைச்சாலை—ஜெர்மன்குடியானவன்—கிழிந்த உடை மெலிந்த உடல்.

(தனக்குள்)

குடி:—சீரா ரெழிலிற் சிறந்திடும் நாடே
ஆரா வமுதா யமர்ந்திடு வாயே,
மேனா னென்றனை மேவிய மன்னன்
தானா னாகைக்குள் தரணி முழுதும்
கொண்ட மேன்மைக் கொடிதா னெங்கே?
அண்ட முழுது மடிமை யாக்கி
அமைதி யெங்கு மறவே நொருக்கிக்
கமைதான் சிறிதுங் கண்ணிற் காட்டாக்
கொடியோன் செய்த கோலந் தன்னை
அடியே னெண்ண வடிவயி றெரியுதே!
தானை செலுத்தித் தகுநின் புதல்வர்
ஊனை யுரித்துக் குருதி சொரிந்தும்
ஊரை யழித்து முழுநிலந் தெரித்தும்
ஆரை யிட்டனன் சுடுகா டெனவே.
அத்துயர் கண்டே னகத்தே பொங்கச்
செத்துயிர் நீங்கினுஞ் செகுப்ப லவனை
எனவே யுதிக்க வெதிரோ னிருப்பிடம்
சினவேற் கையொடு சீறிச் சென்றனென்.
வெய்யனைக் கண்டு வேலினை யெய்யப்
பையவே சென்று பக்கலிற் பாய்ந்தேன்;
அந்தோ விதியே யருகோர் வீரன்
முந்தோ டினனாய் மோதின னென்னைப்
பிடித்தே சென்று பேயோ னிடத்தில்
அடித்தே நிறுத்த வவனுஞ் சிறையில்
வைத்தன னிரண்டு வருட மாகப்
பைத்திய னெனவே பரிதவிக் கின்றேன்.
ஆனா லொன்றெ னாருயி ரின்றே
போனா லென்னே புனிதமுண் டன்றோ?
ஆடை கிழிய வகம்புண் ணாகப்
பாடைப் பிணம்போற் பாழா னாலென்?
தாய்நாட் டிற்காய்த் தனையன் செய்த
தூய்செய லொன்றே தூய்மை தருமே.

சிறைகாப்போன் வருதல்.

(தன்னுள்)

சிறை:—என்று மிவன்போ லெங்கும் காண்கிலென்;
குன்றும் நடுங்கிடுங் குளிர்சிறை தனிலே
ஆடை கிழிந்து மமைதியா யுளனே
தாடை யுடைப்பினும் தன்னிலை குன்றான்
குடியா னவனது குணமிது வென்றால்
முடியுடை வீரர் முற்போக் கெதுவோ!

(உரத்த தொனியுடன்)

மிடி துயர் தனிலே மிளிர்ந்திடு மன்ப!
கடிகுளிர் போக்கக் கருதுமோ ராடை
தந்தன னுனக்கே தரித்திடு வாயே;
முந்துநின் துயரம் முடிந்திடு மின்றே

(ஆடையை வாங்கி முன்பின் பார்த்துவிட்டு)

குடி:—நீதரு மாடைதான் நெய்தது மெங்கோ;
சிறை:—போதரும் பீனும் பிரான்சி லன்றே.
குடி:-ஆயின் வேண்டே னம்மணங் கொள்ளினும்
பாயின் றுறங்கினும் பரநாட் டாடை
அணிந்திலன் சிறிதும்; அன்பநீ யேகாய்
துணிதனை யெடுத்துத் துண்ணெனச் சென்றே.
சிறை:—எந்நாட் டாடை யெதுவா னாலென்
சின்னாண் மட்டுஞ் சீறிடுங் குளிரை
உடன்மேற் படாதே யுதறிடு மன்றே
உடலிற் புகுமோ வுள்நிலை திரியுமோ?
வெளியே நிற்கும் வெறுந்துணி தனிலே
துளியும் வெறுப்புத் தோற்றுத லழகோ?
குடி:—என்னைப் பெற்றே யென்னை வளர்த்த
அன்னை நாட்டி னருமை மதலையர்
குருதி சிந்திய கொலைக்கை யதனால்
குருதி யிழைத்த கறையுடை யாடை
தீதிலா வென்னுடல் தீண்டவுந் தகுமோ
கோதிலா வன்னையின் குரோதங் கொள்வேனோ?
சிறை:—வீணா யுடலை வெறுப்பதிற் பயனென்
காணா மேன்மை கருதவும் படுமோ?
எந்நாட் டாடை யெடுத்துடுத் ததனால்
தந்நாட் டன்பு தளரவும் படுமோ?
குடி:—சிற்றுயி ரின்பம் சின்னா ளடையக்
குற்றுயிர் நிலைக்கக் குரூரர் வனைந்த
பரநாட் டாடை பாவிநா னணிந்தால்
உரநாட் டியுள்ள வொருசிறு மானமும்
பறந்திடு மன்றே பாருல கிகழ
இறந்திடல் மேன்மை யிழிதுணி யணிவதில்
சிறை:—இவனம துரையினை யிம்மியுங் கேளான்
சவக்குழி யெனவே சாகுவ னிதிலே!

(தனக்குள்)

ஆயினு மிவன்ற னகன்ற நெஞ்சு
தீயினும் வேகா திருத்தலு முறுமோ?
என்னே திடமு மென்னே யன்பும்!
என்னே குணமு மென்னே யுறுதி!

(ஏகல்)

காட்சி—2

அரண்மனை—பிரான்சியர் தலைவன், அமைச்சன்.

**தலைவன்:**—ஹூணர் மரபினி லுதித்திடும் மாக்கள்
ஆணவஞ் சிறிது மடைதலு முண்டோ?
வனத்திடை திரிந்த வனசரன் போல்வர்
மனத்திடை யுயர்நல மதிக்கவு மியல்வரோ?
எனினு மென்றனை யெத்துணை மிரட்டினர்
கனியை நசித்திடும் கசிவெனத் தொலைந்தனர்!

**அமை:**—மன்ன ரேறே மாபெருந் தலைவ
உன்னுவ தொன்றை யுற்றுக் கேண்மோ!
ஜர்மா னியர்மேல் ஜயத்துடன் பொருகையில்
ஒருமா னிடனு மொற்றனாய் வந்து
தாயநும் மீது துணிந்தே பாய்ந்த
ஆயுத பாணிய னறிகுவீ ரவனை!

**தலைவன்:**—ஆமா மொருசிறு வறிவிலி மடையன்
ஏமாந் திருந்த வேவலை மயக்கி
என்னைச்சாய்த்திட விழிதொழிலெண்ணினன்;
முன்னமே யவனை முதுசிறை யிட்டேன்.

**அமை:**—அக்கொலை பாதக னுடை கிழிந்திடத்
தக்கவோ ருடையைத் தந்தனன் சிறையோன்;
"தன்னாட் டவரின் தனையர் தமையே
பன்னாள் சிதைத்த பாவச் செயல்பூண்
பிரஞ்சின ரிழைத்த பீடை ஆடை
உரஞ்சவு மாமோ வுடல்மே" லென்று
உதறித் தள்ளின னுற்ற வாடையைச்
சிதறின மூளைச் செர்மா னியனும்;

**தலைவன்:**—புண்ணைச்செய்து புதைத்தனன் கோலும்;
மண்ணைக் கவ்வயான் மாய்த்தில னன்றே!
இனியுந் தாமத மியற்றலிற் பயனிலை
சனியைத் தொலைப்பீர் சடுதியில் தூக்கியே.

**அமை:**—பெற்றே னுனையும் பேதையுந் தொலைக்
உற்றேன் களிப்பு முதறுவன் பகையை [தான்

(ஏகல்)

காட்சி 3.

சிறைச்சாலை-ஜெர்மன் குடியானவனும்
சிறைக் காப்போனும்.

**சிறை:**—ஒருரை நவிலயான் வந்துளே னன்ப
நேருரை பகர நீள்நா வெறுக்குதே.

**குடி:**—பயந்திடே லைய வெத்துணைத் தீங்கும்
பயந்திடு முரையும் பயன்தரா தென்னிடம்.

**சிறை:**— மன்ன னுன்றன் மனநிலை நோக்கி
ஒன்னுக் கொள்கையி லுத்தர வளித்தனன்;
தூக்கி லுடனே தொலைத்திடு வென்றே
ஆக்கினை யிட்டன னனைவரும் வெருவ.

**குடி:**—இவ்வுரை கேட்க யான்மகிழ் வுறுவன்
தெவ்வர் சிறையிற் றேம்பிடுங் காலம்
விரைவி லகலும் வியனுல கினிலே;
வரைதற் காகா வனப்புடை யென்றன்
நாடு வளமை நனியெய் திடவும்
தேடு மேன்மை தெரிந்திட் டடையவும்
இன்னுயி ரொன்று சிறியேன் தந்திடப்
பெற்ற நிலைமை பெரிதும் மகிழ்வன்;
இம்மொழி தன்னை யினிதே விளம்பிய
உம்மொடு நட்பை யுயிரெனக் கொள்வன்.

**சிறை:**—நெஞ்சி லடங்கா நிலையினை யுடையாய்,
எஞ்சிய மாற்ற மேதேனு முண்டோ.

**குடி:**—ஒன்றனை விழைகுவ னொளியா தளிப்பாய்,
என்றனை மாய்க்குமவ் வெழிற்றின மன்று
என்னுட றனையே யெம்நாட் டுடையில்
துன்னுவ தன்றித் தெவ்வ ருடையில்
அடக்கஞ் செயவே யனுமதி தாரேல்,
கடைக்கண் சார்த்தியிக் கருணை காட்டுவாய்.

**சிறை:**—நின்ற னெண்ணம் நிறைவேற் றற்கே
என்ற னெஞ்ச மிசைந்துள தாமே.
ஆயினுந் தலைவர தாணை யெவ்வழி
போயினும் போகும் புகல்வதற் கில்லை.

(ஏகல்)

காட்சி 4.

சிறைக்கூடம்-தூக்கிடுநாள்.
குடியானவன் தனியே முழங்காலிட்டுக்
கடவுளைத் தொழுகின்றான்.

**குடி:**—முழுமுத லோனே மூதறி வையனே!
தழுவிய வென்னைத் தரித்திட வருள்வாய்;
இன்னே யென்னுயிர் கைத்தே முடிவுறும்;
இன்னே யுன்ற னெழிற்பத மடைகுவன்;
இந்நாள் காறு மென்மன மறிய
எதுவுந் தீங்கினை யியற்றிய தில்லேன்;
என்மன மறியா தியற்றிய பிழைகள்
நன்மனம் வைத்து நனிநீ பொறுப்பாய்
ஜர்மா னியருஞ் சகித்திட வொண்ணாக்
கர்மாந் திரத்திற் கடுநிலை எய்தினர்;
அவர்தாம் நன்னிலை யடைந்து வாழ
உவந்தே யருளுவை யுளமதி லுன்னியே!
முழுமுத லோனே மூதறி வையனே
பழுதிலாத் தாளிற் சரணஞ் சரணம்!

(தியானித்தல்)

(ஓர் போர்வீரன் வரல்)

**வீரன்:**—பொழுதாய் விட்டது புறப்படு முடனே.

**குடி:**—எழுந்தே வந்தே னினிநீ செல்வாய்;
(சிறைக்கூடத்தில் ஒரு இடத்தில் தூக்குமேடை
யண்டைசென்று அதில் தானே ஏறி நிற்றல்.)

**குடி:**—ஆருயிர் நாடே யருமை ஜெர்மனீ,
ஆருயிர் தன்னை யளிப்பே னுனக்கா
உன்றன் மக்க ளுவந்தினி வாழ்க!
உன்ற னிலமு மூன்றிச் செழிக்க!
அன்புடை ஜெர்மனி யருமையில் வாழ்க!
துன்பெலா நீங்கித் துலங்கி வெல்க!
ஜெர்மனி வாழ்க செழிப்புடன் வாழ்க!
ஜெர்மனி வெல்க சிறப்புடன் வெல்க!

(தூக்கிடுகையில்)

**குடி:**—எந்தன் சவத்தை யெழிலுடை ஜெர்மனி

........................................

(என்று உரக்கச் சொல்லிக்கொண்டே உயிர்விடுதல்)
(பார்க்கவந்தோர் கண்ணீர்விடுதல்)

**யாவரும்:**—அந்தோ துயர மந்தோ வுறுதி
அந்தோ அன்பு; அந்தோ திடமனம்!



(தலைவன் அவ்வழிச் செல்ல, அனைத்தும் கண்டு கண்ணில்
நீர்த்துளி ததும்ப)

(தனக்குள்)

**தலைவன்:**—இவனும் மானுட வினத்தன் றூனே!
எவனிலு மிப்பண் பென்றுங் காண்கிலன்
மனநிலை யித்துணை மதிப்பை யெய்திடின்
இனநிலை யிவ்வுல கெங்கு மிலதோ
இழைத்தனன் றவறே யினியென் செய்குவன்;
பிழைத்திடின் பாரினில் பெரிதா யியங்குவன்
இறந்தும் புகழினை யிருநிலம் விரிப்பன்;
அறந்தனைச் செலுத்த லவன்மாட் டன்றோ!
(தன் ஆட்களை நோக்கி உத்தரவிடுதல்)
அழகாய் ஜெர்மனி யாக்கிய வாடையில்
அழகாய்ச் செய்வீ ரடக்க மிவன்றனை.
(தலைகவிழ்ந்த வண்ணம் முழுச்சிந்தனையுடன் ஏகல்)

முற்றிற்று.

---

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[356-வது பக்கத் தொடர்ச்சி]

நஞ்சமகள் தந்ததேன வஞ்சனைசெய் செய்யுள்.

எழினி எழுகின்றது; எங்கும் அமைதி; தருக்களில் சிலம்பும் புட்களின் ஒலியினோடு நதிக்கரையில் சிற்றலைகள் மோதுஞ் சில்லொலியும் மயங்குகின்றது. தான்சமைத்த கொடிமாடத்தின் புறத்திருந்து இலக்குவன், இங்கோர் மலரும் அங்கோர் கிளையுஞ் செருகி அலங்கரித்துக்கொண்டிருக்கின்றான். மணவாழ்க்கை யெய்திய ஆண்டுகள் பலப்பல உடனிருந்து வாழ்ந்த பின்பும் இன்றைக்கே இடந்தலைப்பட்ட புதுக்காதலர் போல் ஒருவரையொருவர் காணுந்தோறும் கரைகாணா உவகையோடு பரிந்துநோக்கிப் பூரிக்கும் உள்ளத்தவ ரிவராதலால், இராமனுஞ் சீதையும் அப் பர்ணசாலையின் வாயிலில் இனிதமர்ந்து கண்களவுதான் ஆடினாரோ, வண்டோச்சி மெய்பயின்றாரோ, அல்லது நலந்தான் புனைந்துரைத்து அசதியாடி அகமகிழ்ந்து உவகைபூப்ப உளஞ்சிறந் தோங்கினார்களோ யாம் அறியோம். அந்தச் செவ்வியில்,

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
யஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்

[செம்பஞ்சுக் குழம்பும், ஒளிமிக்க குளிர்ந்த தளிர்களும், இவள் பாதங்களுக்குத் தாம் நிறத்திலும் மென்மையிலும் ஒப்பாகவில்லையே என்று மனம்வருந்தும்படி, சிவந்த அழகுடைய தாமரைமலர்போன்ற சிறிய பாதங்களை உடையவளாய், அழகிய சொற்களைப் பேசும் இளமையான மயில் போலவும், அன்னம்போலவும் வஞ்சிக்கொடி போலவும், விஷமே அன்ன அவ்வஞ்சமகள் சூர்ப்பணகை வந்தாள்]

வந்தவள் நடையோ, மற்று, அவளைக் களத்தினுள் வரவழைக்குமிச் செய்யுளடிகளின் சந்தமோ அழகிற் சிறந்தது? இராமனை வென்றில அச் சழக்கியின் சீறடிகள்; இச்சந்தமோ நம்மனோருள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. அன்னாள் சீறடிகளை மறந்து கம்பருடைய் சீரடிகளிற்றானே சிந்தனை செல்லாநிற்கையில்,

பொன்னொழுகு பூவினுறை பூவையெழில் பூவை
பின்னெழில்கொள் வாளிணைபி றழ்ந்தொளிர்மு கத்[தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தடம ணிந்தோர்
மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவ தென்ன

[மகரந்தப் பொடிகள் உதிர்கின்ற செந்தாமரைப் பூவில் தங்குகின்ற கிளிபோன்ற அழகுடைய திருமகள் பின்னாகும்படி மிக்க அழகுவாய்ந்தவளும், வாள் இணைபோல் இரண்டு கண்கள் ஒளிவீசுகின்ற முகத்தையுடையவளும் ஆகிய இச் சூர்ப்பணகை, வானத்தினின்று இறங்கும் இத்தோற்றம், மின்னலானது ஓர் கன்னியின் அழகையும் மேகலாபரணம் அணிந்த அழகிய தேரையுங் கொண்டு ஆகாயத்தினின்று இறங்குவதற்கு நிகராக]

கானினுயர் கற்பக முயிர்த்தகதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்

[வாசனை மிகுந்த கற்பகத்தரு பெற்ற ஒரு ஒளிபொருந்திய கொடியானது, நல்ல பெண்ணுருவத்தை யடைந்து, மிகுகின்ற காமஒழுக்கத்தையும் வாசனைபொருந்திய தேன்போன்ற மொழியையும் கொண்டு கண்ணுக்கினிய அழகை நன்றாகப்பெற்று, மானின்விழியை உடையதாம் ஒருமயில் வந்தது என்னும்படி வந்தாள்]

"செய்யரைச் சேர்ந்துளாருஞ் செய்யராய்த் திகழ்வரன்றே" என முன் ஓர் இடத்தில் விதித்தனர் கம்பர். அவ்வாறே, வஞ்சரை வருணிப்போரும் வஞ்சராய்த் திகழ்வார்போலும். உள்ளத்தில் உயர்பெருங் குணத்தொடர்புகள் ஒன்றுமின்றி வெளி உருவத்தில் மாத்திரம் மிளிர்கின்ற இவ்வரக்கியைப்போன்றே அவளை வரவழைக்கின்ற பாசுரங்களும் படிப்பதற்கு அழகாய்த் தோன்ற, ஆழ்ந்த கருத்தேனும் செம்பாகப் பொருள் பயக்கின்ற சொற்களின் இணக்கமேனும் இல்லாமல் அமைந்திருக்கின்றன. ஏற்பதற் கொன்றும் உத்தமச் செம்மையின்றிப் பார்ப்பதற்குமாத்திரம் பகட்டாகப் புனைந்தொழுகும்இப்பாசுரங்களுக்குரியவஞ்சனையைக் கம்பர்அச்சூர்ப்பணகையினிடத்திருந்தேகற்றிருத்தல் வேண்டும். அரக்கியுள்ளத்தை ஒளித்தொரு அரம்பையர் உருவம் பூண்டு, தேயும் கற்பினளாய், நஞ்சமென வரும் இவ் வஞ்சமகளுக் குரிமையாகி நிற்கின்ற இச் செய்யுள்கள் இவ்வண்ணம் ஓசைநயத்தோடு ஓய்ந்துவிட, பண்டைநாள், உள்ளும் புறமும் ஒருங்கே ஒளிர்கின்ற தூய்மையளாய அந்தத் தெய்வக்கற்பினாள் சீதாபிராட்டி, இவ்விராமனையே சந்திக்க, மிதிலாநகர்க் கன்னிமாடத்து உம்பரின்மாடே, தென்னுண் தேனின் தீஞ்சுவைச் செஞ்சொற் கவியின்பம்போல் அன்னம் மாடும் முன்றுறைக்கண் நண்ணுஞ் செவ்வியில்,

தங்கே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமிர் தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் [illegible] லிகின்றாள்

[தமக்கு நிகரில்லாத அழகுவாய்ந்த தோழியர் முதலிய மாதர், "சிவந்த தளிர்போன்ற கைகளையுடைய மானே, தேனே, அரிய அமிர்தமே, என்று அவள் அடிகளை வணங்கி, அவள் வரும் வழியில் மலர்களைத் தூவி வரிசையாய் நெருங்கி உடன் ஏக, தாமரைப் பூவில் வாழும் இலக்குமியைப் போல் நடந்து விளங்குகின்றாள்]

பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரங்
கொன்சே ரல்குன் மேகலை தாங்குங் கொடியன்னார்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னா சென்னும் படிநின்றாள்

[அழகிய மெல்லிய கால்களில் சதங்கையும், இரத்தின ஹாரமும் மலர்மாலையும் மேகலையும் பூண்டிருக்கின்ற பூங்கொடியனைய தோழியார், இவளது வடிவத்தின் இனிய அழகை மகிழ்ந்து பார்த்திருக்க, நூறுகோடி மின்னல்கள் சேவித்திருக்க அவைகளுக்கிடையே மின்னலின் அரசே இவள் என்று சொல்லும்படி நின்றாள்]

என்று இக்கம்பரே ஓசைநயமுடன் பொருளின்தெளிவும் ஒருங்கே இணைந்தொழுகப் பாடவல்ல பெருமையைக் காட்டினார். மீண்டும் அங்கே,

கொல்லும் வேலுங் கூற்றமு மென்னு மிவையெல்லாம்
வெல்லும் வெல்லு மென்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனிநின்றாள்

[கொல்கின்ற வேல் எமன், என்னும் இவையனையவைகள் எல்லாம் தனக்கு நிகராகாமையால் வெல்லும்வெல்லும் என்னும்படி களிக்கின்ற கண்களையுடைய அந்தச் சீதாப்பிராட்டியின் தன்மை சொற்களால் சொல்லக்கூடியதொன்று அன்று. மலையும் சுவரும் திண்ணியகல்லும் புல்லும் கண்டு உருகப் பெண்மையெனும் நலங்களெல்லாம் கனிந்தவொரு கனிபோன்று அவள் நின்றாள்]

என்று வருகின்ற பாசுரமும் அதற்கு இலக்காகிய சீதையைப் போன்றே வஞ்சனையின்றிக் கல்லும் புல்லும் கரைந்துருக நிற்கின்றது. எவ்வுயிரையும் தன் அன்பினால் அகத்தடக்கிய அன்னை சானகியின் உண்மையழகிற் கமைந்த பாசுரங்கள் அவை; மற்றிவையோ, பசிக்குணவாக எவ்வுயிரையும் இட்டதோர் வயிறுடைய அரக்கி சூர்ப்பணகையின் புனைவேடத்திற் கமைந்த பாசுரங்கள் ஆகின்றன.

இவ்வண்ணம் அவ் வஞ்சமகள் பல்லவமனுங்கச் சீறடிபெயர்த்து ஒல்கிவரு மெல்வையில்,

நூபுரமு மேகலையு நூலுமற லோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னக்
கோமகனு மத்திசை குறித்தனன் விழித்தான்

[அவளது சிலம்பும் மேகலையும் ஆடையும், கருமணல் போன்ற கூந்தலிற் சூடிய மலர்களில் மொய்க்கின்ற வண்டுகளும் ஆகிய இவை ஒன்றோடொன்று இகலிச் செய்கின்ற ஓசைகள், ஒரு பெண் வருகின்றாளென்பதைத் தெரிவிக்க, இராமனும் அவ்வொலி வந்த திசையைக் குறித்து நோக்கினான்]

நோக்குதலும்,

விண்ணருள வந்ததொரு மெல்லமுத மென்ன
வண்ணமுலை கொண்டிடை வணங்கவரு போழ்தத்
தெண்ணருளி யேழைமை துடைத்தெழுமெய்ஞ் ஞானக்
கண்ணருள்செய் கண்ணனிரு கண்ணினெதிர் கண்டான்

[விண்ணுலகம் கொடுக்க அங்கிருந்து வந்தவொரு மெல்லிய அமுதம் என்ன, அழகியமுலைகளைத்தாங்கி இடைநுடங்க வரும்போது, வலிமையை அளித்து அறியாமையை நீக்கி மிகுகின்ற தத்துவஞானமாகிய கண்களைக் கொடுக்கின்ற இராமபிரான் தன்னிரு கண்களாலும் அவளை எதிரே கண்டான்]

அவதாரச் சிறப்புப்பெயரின்றித் திருமாலையே கண்ணனெனுமிச்சொல் லிங்குப்பொதுவிற்குறிக்கின்றது. அப்பெயரிற்குக் காரணங் கற்பிக்கின்ற கம்பர், தன்னையடைந்தார்தம் ஏழைமைதுடைத்து அவருக்கு மெய்ஞ்ஞானக்கண் அருள்வதைத் கூறுகின்றார். எனினும் கம்பரது தீர்ந்தகருத்து இதுவே என்று கொள்ளற்கில்லை. ஏனெனில்முன் மணமகனாக இவ்விராமன் மிதிலைமாநகரின்கண் உலாப்போந்தநாள்,

வீதிவாய்ச் செல்கின் றான்போல்
விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே
வாவுமான் றேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை
யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய பெயர்க்குத் தானே
உறுபொரு ளுணர்த்தி விட்டான்.

[வீதியிற் செல்கின்றவன்போல் தோன்றினானேனும், தன்னைக்கண்டு கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்ற மாதர்களுடைய கண்களுக்குள்ளே தாவுகின்ற குதிரைகள் கட்டிய தேரில் செல்பவனாகி, எல்லாவகையிலும் சிறந்த பெரியவர்கள் தன்னை எல்லார்க்கும் கண்ணன் என்று கூறிய பெயரிற்குத் தானே தக்க பொருளைத் தெரிவித்துவிட்டான்]

என வேறோர் வழியில் விளக்கியதும் இந்தக் கம்பரே. கண்ணில் தங்குபவன் என்னுங் காரணத்தால் அங்குக் கண்ணன் என்னும் பெயரிற் கிவ்வீரன் உரியனாயினனெனில், கண்ணினைத் தருகின்ற காரணத்தால் இங்கு இவ்வள்ளல் அப்பெயரால் புனையப்பெற்றதும் தக்கதே. மற்றவர் ஏழைமை துடைத்து எழுமெய்ஞ்ஞானக் கண்ணருள்செய் கண்ணனே, இங்கிவள் ஏழைமையைத் துடைத்தலின்றி, அவளுடைய பேரழகினால் தன்னுடைய கருத்தே சிறிதளவு கலங்கினான் போலும். ஏனெனில், அவளைத் தன்னிரு கண்ணில் எதிர்கண்ட வளவில்,

பேருழைப னாகருல கிற்பிறிதின் வானிற்
பாருழையி னில்லதொரு மெல்லுருவு பாரா
வாருழைய டங்குமழ கிற்கவதி யுண்டோ
நேரிழையர் யாவரிவர் நேரென நினைந்தான்.

[பெரிய இடத்தையுடைய நாகலோகத்திலும் தேவலோகத்திலும் அல்லது இப்பூலோகத்திலும் இல்லாத இவளது ஒப்பற்ற மெல்லிய உருவத்தைப் பார்த்து, இவளிடத்தில் அடங்கிய நிறைந்தஅழகிற்கு எல்லையுண்டோ. நேரான ஆபரணங்களை யணிந்த பெண்களுக்குள், இவளுக்குச் சமானமானவொருத்தி வேறு எங்கு உளள், என்று நினைந்தான்]

இராமன் உடைந்திலன் உண்மையே. ஆயினும் தன்னெனத்தோன்றியவப்பெண்ணணங்கின் இணையிலாப் பேரெழில்உருபுடையவனுள்ளத்தையள்ளியசைத்தது. பிற்றைநாள் இலங்கைவெங்களத்தில் பிரம்மாத்திரத்திற் கழிந்துகிடந்த இலக்குவனைத்தழுவி, 'ஐயகோ, இக்காட்சி, பொய்ப்பிறவிக்கும் ஒல்லேனால்" என்று கலுழ்தற்கிருக்கும் இச்செம்மல் இன்று, "இவ்வழகியைக்கண்டும் யான் கரையாதுநிற்றல் இப் பொய்ப்பிறவிக்கும் ஒல்லுமோ" என்று நெகிழ்ந்திலன் என்பதற்கையமில்லை. இச்செய்யுளின் மூன்றாவதடியை "வாருழை அடங்கும் அழகிற்கு அவதியுண்டோ" எனவே நிறுத்தி "இவள் அணிந்துள வார்க்கச்சினுள் அடங்கிய கொங்கைகளின் அழகிற்கு எல்லையுண்டோ" எனக் காமவிளைவுடன் வியந்தானென்னும் பொல்லாப்பொருள் கொள்ளற்கு மோனை இடந்தராதாதலின், அத்தகைய அபவாதத்தினின்று கம்பர் அரிதின் காத்துவிடுகின்றார். நாடகக் காட்சியின் நயத்தினை வளர்க்கஉன்னிக் கம்பரோ நலமல சில நவின்றிடார்.. எனினும் இதயமத்தனையும் அப்பாற் கழித்துவிட்டுத் தன்பாத்திரங்களை மரப்பாவைபோல் இயக்கிவைப்பதும் நாடகக்கலையின் நயந்தெரிந்தோர்க் கழகன்று. இவ்விரண்டிற்கும் இடையேயொரு நெறி தொடர்வதின்றியமையாததாயிற்று. "இவள்" என்றது, அப்புதியோளை "இவர்" எனப் பலர்பாலில் நினைத்தசெம்மை, அவளதுபெண்பால்தன்மையைஉட்கொள்ளாமல் அழகைமட்டுமே வியந்தனன் இராமன் என்பதை வெளியாக்குகின்றது. எனினும், அழகெனு மணியுமோர் அழகுபெறத் தோன்றிய சீதைக்குக் கேள்வனும் இவன் சூர்ப்பணகையை நோக்கி, "நேரிழையர் யாவ ரிவர்நேர்" என நினைப்பது நேரிதோவென்னும் ஐயம் நிகழ்வதற்குரியதே. ஆயினும் என்? அழகினை மிகைபட வியப்பதெல்லாம் வெங்காமக் கடனிறக்குஞ் சிந்தனையின் சூழ்ச்சியே என மதித்தலும் இராமன்மாபிற்கு ஏற்காது. இவனிலை இங் கிவ்வாறாக,

அவ்வயினவ் வாசைத னகத்துடைய வன்னாள்
செவ்விமுக முன்னியடி செங்கையி னிறைஞ்சா
வெவ்வியநெ டுங்கணயில் வீசியயல் பாரா
நவ்வியி னொதுங்கியிறை நாணியய னின்றாள்.

[அப்பொழுது, முன்னுரைத்தபடி அளவுகடந்த ஆசையைத் தன் அகத்திலுடைய சூர்ப்பணகை, தன் அழகியமுகத்தைத் தெரியக்காட்டினளாய் எதிர்வந்து, இராமனது பாதத்தினைத் தன் சிவந்த கைகளால் வணங்கி, கொடிய தன் பெரிய கண்களினின்று பார்வையாகிய பாணங்களைச் சிதறினளாய், இராமனை நேராகப் பாராமல் பொதுநோக்காகத் தன் கடைக்கண்களால் பார்த்துக்கொண்டு, மான்போல் மருண்டு ஒருபுறம் விலகிச் சிறிதுநாணமும்காட்டி அயலில் நின்றாள்]

காமத்தைக் கனற்றும் நெறியனைத்தும் நன்குபுரிகின்றாள் இவ்வரக்கி. இயற்கையாயிவட் கிச்சூழ்ச்சிகள்சுரந்தவோ அல்லது, பூண்டவேடத்திற் கிணங்க நடிக்கின்றனளோ என்று தேர்ந்து செப்புதல் அருமை. இராமன்பால், காட்சி ஐயம் துணிவு அனைய சிலசெய்திகள் மெல்ல மெல்லத் தோன்றுமற்றொன்றி நிகழ்ந்திருக்கின்றன. நயப்பும் இறை இருந்ததோ இல்லையோ என்னவே இயங்குகின்றது இக்காட்சி. இந்நிலையில்,

தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையொர் புண்ணியமதன்றோ
வேதுபதி யேதுபெயர் யாவருற வென்றான்
வேதமுதல் பேதையவ டன்னிலை விரிப்பாள்

[வேதமுதல்வனாகிய இராமன் அவளை நோக்கி, திருமகள் போன்றவளே, உன் வரவு தீங்கில்லாத நல்வரவு ஆகுக. விலகிச் சற்று தூரத்தில் நிற்பவளே, நீ யிங்கு வருதற்கு யாம் செய்த புண்ணியம் பெரியதாயிருத்தல்வேண்டும். உன் ஊர் எது, உன்பேர் யாது, உனக்கு உறவினர்யாவர், என்று வினவினான். அதுகேட்டு, அப் பேதையாகிய சூர்ப்பணகை தன்னுடைய நிலைமையைத் தெரிவிப்பவளாயினள்]

அத்துணை அகன்று நில்லாமல்அவள் தான்நெருங்கி வந்து எதிர்நிற்பினும் நலமே என்னுங் குறிப்பினை, "சேயோய்" என்னுமவ் விளி அரிதின் உட்கொண்டிருக்கின்றதோ, யாதோ! "போத உளது எம்முழையொர் புண்ணிய மதன்றோ!" என்று வியந்தது "அன்னமென்னடை அரிவையைத் தந்த மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது" போல் ஒலிக்கின்றது. கோவைக்குரிய வரன்முறையில் வழங்குவதிங் கில்லையாயினும், பதியும் பெயரும் வினைய செய்தி அகத்துறையில் அடங்கும். காதற்பாங்கி கையரு கில்லாமையால் இடந்தலைப்பட்ட இவளையே வினவுதல் இன்றியமையாததாயிற் றென்னல் வேண்டும். எனினும், இவையன்ன செய்திகளுக்கேற்ற சொற்கள் நிற்றலைக் கண்டு மயங்கியமதியினராய், இராமன் தான் தன்னிலை தளர்ந்து சாய்கின்றானோவெனப் பிழைபட அயிர்க்காவண்ணம் அவனை 'வேதமுதல்' என்னும் வாசகத்தால் காத்துவைத்த கம்பர் கைத்திறம் சிறியதன்று.

## ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[325-வது புக்கத் தொடர்ச்சி]

### 5. முத்தப் பருவம்.

முருகுவிரிபங்கயமுறக்குடைந்துதிர்முத்த
மொய்த்திடுமுன்வாவிதோறும்
மூரிவெண்சங்குவளர்ந்தீன்றமுத்தம்
முழவர்முன்றிற்புறத்துமல்கும்
குருகுசெறிபண்ணையிற்செந்நெல்முத்தங்
கடைஞர்கூட்டுறுகளத்தினிறையுங்
குறைவில்பைங்கழைமுத்தமாலைவாய்க்
கானலாங்கொல்கரிமருப்புமுத்தம்
பெருகுமுன்னந்தியங்கிரியெலாங்
குவிதரும்பெட்புநிறைவெதிரின்முத்தம்
பெருமைசெறிவேணுவனமாதலா
லெங்கணும்பிறழ்தலாலருமையன்றே
பருகுமின்னமுதனையமழலைதரு
நின்றிருப்பவளவாய்முத்தமருளே
பண்ணவர்தினந்துதிசெய்வெண்ணெய்வளர்
செங்கண்முகில்பவளவாய்முத்தமருளே 1.

அளிதருமலர்த்தளவமுகையனைய
சிறுநகையரும்பியிளமுறுவனிலவா
லன்பச்சகோரக்குழாங்கொள
விருந்தூட்டியமுதெனத்திவலைசிந்திக்
களிதருமிளங்குதலைமதுவொழுகு
செய்யபங்கயமலரெனச்சிவந்து
கன்னியர்கள்காதலங்கொடியவிடம்
நீங்கவுயிர்காட்டுகடவுண்மணியுமாய்த்
தெளிதரமதிக்கிலகிலாண்டகோடிகளுமுட்
சேரினுஞ்சிறிதுநிறையாத்
தெளிவுதருமுத்தங்கொளத்திரிபவர்க்
குனிதழ்சேர்முத்தமன்றியுண்டோ
பனிதவிரகமழுவெங்கழைவிசை
வடிக்கின்[illegible]

பண்ணவர் தினந்துதிசெய்வெண்ணெய்வளர்
செங்கண்முகில்பவளவாய்முத்தமருளே. 2.

புனிற்றிளங்கன் றினைப்பிணிகெகிழ்த்தன
னெனப்புழுதியினணைந்தனனெனப்
பொழிமுடைநறைச்செழும்பாலடுங்
குழிசியைப்பொடிபடவுதைத்தனனெனத்
தனித்திளங்குதலைமின்னார்களைக்கொடு
சென்றுதகவிலவியற்றினனெனத்
தளர்வுடனடிக்கடிமுறைப்படும்பொதுவியர்
தமக்குவப்பாதல்வேண்டி
யனித்தியவுடற்குறைதவிர்ப்பவர்நினைக்குமுன்
னஞ்சனத்திருமேனிமீ
தன்னைகைத்தாம்பினிலடிப்பதிற்பொருமிமெல்
லலரிதழ்துடிப்பவுண்கண்
பனித்திடவிரைந்தவளணைப்பதினகைக்குமுன்
பவளவாய்முத்தமருளே
பண்ணவர்தினந்துதிசெய்வெண்ணெய்வளர்
செங்கண்முகில்பவளவாய்முத்தமருளே. 3.

கடல்முத்தமுவர்நாறுமழைமுத்தமின்னெடு
கலந்தாலுமிடிபட்டதாங்
கன்னல்முத்தம்மதனன்வில்லங்கமேல்
வருங்கமலமலரீனுமுத்தம்
மடலுற்றமதுநிறம்னெண்டின்முத்தங்குழியும்
வளைதரும்பங்கமடையும்
மாதர்களமுத்தமோபோகித்திருக்கும்
வெண்வளைமுத்தமீனப்படும்
அடலுற்றவெங்கட்களிற்றின்வெண்கோட்டு
முத்தார்க்குமுயிரோடுகிடையா
அம்புலியின்முத்தமேகுடிலநெடியால்
வருவதாதலாலிவைவிரும்போம்
படலைப்பசுந்துளவுகமழ்மார்பநின்றிருப்
பவளவாய்முத்தமருளே
பண்ணவர்தினந்துதிசெய்வெண்ணெய்வளர்
செங்கண்முகில்பவளவாய்முத்தமருளே. 4.

வேறு

இளைக்கு மருங்குற் குரும்பைமுலை
யிடைமெல் லியலார் புடைநெருங்கி
யமுனைப் புளினத் தடங்குவட்டி
லிளவெண் ணிலவு கதிர்கொழிப்பத்
தொளைக்குங் குழலி னெழுமமுதஞ்
சுரக்கு மிசைக்கு மனமுருகித்
துயிலுங் கலையுங் கலைந்தறிவு
துளங்கி யனங்கப் பெரும்பதகன்
வளைக்குங் கருப்புச் சிலைதுரந்த
மலர்வெம் பகழிக் கொழுங்கனலை
மறிக்கும் படிக்குன் னிதழ்துளிக்கு
மலர்க்கை முகிழ்ப்பக் குறுமுறுவல்
முளைக்கும் பவளச் செழுங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முகிறேய் மதிள்சூழ் வெண்ணெய்நகர்
முதல்வ தருக முத்தமே. 5.

பமுக்கும் கொலைவெஞ் சினத்தவுணர்
பகட்டுச் சிரங்கள் பொதிரெறியப்
பணைக்கைக் களிறு பிளிறிவிழப்
பரவிப் புரவித் திரள்புரள
இழுக்குஞ் சினக்குன் றனவிரத
மிசைப்புக் கலைந்தச் சொடிந்தருள
எதிர்க்குந் திறத்துப் படையவய
ரிடிக்கு முருமுக் கெதிர்ந்துரகம்
உழக்கும் படிக்குக் குடர்பிடுங்கி
யுதிரஞ் செறிந்துள் ளுயிரலைய
ஒலிக்கும் பரவைப் புனல்சுவற
வுரகஞ் சலிப்பத் தவளசங்கம்
முழக்கும் பவளச் செழுங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முகிறேய் மதிள்சூழ் வெண்ணெய்நகர்
முதல்வ தருக முத்தமே. 6.

வேறு

வண்டு குடைந்தபசுந் துளவத்
தொடைமன் றல்செய் நந்தனமே
மழலைப் பணிமொழி நளினச்
சிறுகிளி வளர்வுறு பஞ்சரமே
தொண்டு புரிந்திரு செந்தளிர்
மெல்லடி தொழுமவர் செல்கதியே
சுரர்முக மலர்வித் தவுணக்
கனையிருள் தொலைவுசெய் செங்கதிரே
ளெண்டு கிளைத்திடு குழியில்
வழியில்நிறை குவளைக் கழியில்
நீலக் கவரி முலைப்பொழி
தீம்பால் நிலைபெறு கடைஞர்சிறார்
மொண்டு பயிர்க்கிடு வெண்ணெய்
நகர்க்கிறை முத்த மளித்தருளே
மும்மத யானைக் கருள்புரி
குளிர்முகில் முத்த மளித்தருளே. 7.

பூவையின் மதுமலர் பொருவுநின்
னுருவும் புண்டரி கக்கண்ணும்
புதியவெண் ணூலு மொருநெறி
காணிற் பொறிவெம் பகையெறியும்
தீவயின் முனிவரு மணவுறு
மெழுகிற் றிரிகுவர் மனமென்றாற்
சிறுநுதல் வரிவிழி வெதிர்புரை
மென்றோட் டெரிவையர் உய்வாரோ
பாவைதெள் ளமுதிற் பாற்கட
னடுவிற் பதும மலர்த்தவிசிற்
பைம்பொற் சுடர்விடு பெண்ணமுதந்
திண்பரு வரைமார் புறலான்
மூவரின் முதன்மை படைத்தருள்
புங்கவ முத்த மளித்தருளே
மும்மத யானைக் கருள்புரி
குளிர்முகில் முத்த மளித்தருளே. 8.

வேறு

அதிரப் பொருசின வாளவுணப்
படையவிர் திசையெட்டும் பரவுநா
ளறுதிக் கடையுக வானென மொய்த்
திடுமழல் வடவைச்செந் தழலெனு
எதிரச் சிலருடல் நீறுபடச்
சிலரிரு துணிவுற் றங்குருளவோ
டிரதத் தொகைவிழ வாசிபடத்
தழலெழு விழிமைக் குன்றனையமா
உதிரப் புணரியி னூடுழலக்
குறையுடல் நிரைநிர்த்தம் புரியவா
ருயிரைக் கொடுதிரி காலனிளைப்பற
வுலகி னிடுக்கண் டவிரவான்



முதிரப் பொருகதி ராழியெடுத்தருள்
முதலவன் முத்தந் தருகவே
முதுமைத் திருநவ நீதபுரத்துறை
முதலவன் முத்தந் தருகவே. 9.

பனியைத் தெறுகதிர் போலுமுன் [யோர்
மெய்ப்பெயர் பரவிவழுத்தும் பெருமை
பவம்விட் டுனதடியா ரொடிருப்பது
பழமறை செப்புஞ் சரதமே
கனியைக் கவர்கிலர் காய்நுகரத்
திரிகசடர் மயக்குண் டுழலுவார்
கமலப் பதமினை யாவருக்கு
மொர்கதியும் வரக்கண் டிடுவமோ
குனியைச் சிலைகொடு வாளிவிடுத்
தெதிர்குறுகு கொலைக்கண் டகரெலாங்
குலைவுற் றிடநிறை வேள்வியினிற்
பலிகொளு மமரர்க்குங் களிசெயா
முனியைப் பெருமைகொள் கோசிகனைப்
பணிமுத லவன்முத்தந் தருகவே
முதுமைத் திருநவ நீதபுரத்துறை
முதலவன் முத்தந் தருகவே. 10.

முத்தப் பருவம் முற்றிற்று.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[349-வது பக்கத் தொடர்ச்சி]

சப்தப் பிரமாணம்.

(viii) வாக்கியம், பதம், எழுத்து

வாக்கியமே பொருள்களை அறிவுறுத்தற்கு இன்றி யமையாதது. அது பல பதங்கள் தொடர்ந்தும், அல்லது ஒரு பதத்தில் சில மறைந்தும் பொருள் தருவது. எழுத்தும் அவ்வாறே.

"எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அது பகாப் பதம் பகுபதமென
இருபாலாகி யியலு மென்ப"

நன்னூல், பதவியல்—முதல் சூத்திரம்

சொல்லிலக்கணம் கூறுமிடத்தும்,

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படைக் குறிப்பின் விரிப்பது சொல்லே.

நன்னூல் சொல்லதிகாரம்—பெயரியல் 2.

என்பர். பொருள்கள் தம்பதங்களைக் கேட்பானுக்கொன்றற்கொன்று விடயமான அவாய்நிலையைத் தோற்றுவித்தலின், அவாய்நிலை யெனக் கூறப்படும். அதன் பொருள்வழியால், அப்பொருளைக் கூறும் பதங்களும் அவாய்நிலையன வென உபசரிக்கப்படும். அல்லது, பதங்களே பொருளைக் கூறிப் பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையைத் தோற்றுவிப்பனவாகையால் அவாய்நிலை யென்னும் நாமம் பொருந்துமென்பார் சிலர். இங்ஙனம் பொருள்கள் அவாய்நிலையன. ஒன்றற்கொன்று அந்வய யோக்கியதை யுடையனவுமாம். பொருள்வழியாற் பதங்களும் அவாய்நிலையனவான யோக்கியமுடையன வென்பர்:—"சொல்லும் பொருளுமே தூத் திரியும் நெய்யுமாம், நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாக" என்று நக்கீரர் கூறியவாறு சம்பந்தம் பெற்றுநிற்கும். சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள அவாய்நிலை சொல்சோதியாய் விளங்கும் தன்மையை அப்பர் கீழ்வரும் பாசுரத்தில் ஒருவாறு குறிப்பிடுவது காண்க:—

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கும் மேலா னானை
மெல்லியலாள் பாகனை வேதம் நான்கும்
கல்லாலின் நீழற்கீ ழறங்கண் டானைக்
காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

திருநள்ளாறு - திருத்தாண்டகம் 8.

சொல்லானது பவளக்கொடிபோல்தொடர்ந்து படர்ந்து பொருளைவிளக்கும். பொருள்வழியாற் பதங்கள் தாமதமின்றி உச்சரிக்கப்படுவதும், அர்த்த மூலமாயின்றி நேரே பதங்களில் பொருள் சாட்சாத் காரமாயிருப்பதும் உணர்க. பொருள்கூறும் வழியாற் கேட்பானுக்குப் பதவேறுபாட்டு விடய அவாய்நிலையானும், பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையானும் தோற்றுவிக்கின்ற அன்வயயோக்கியப் பொருளுடைய பதங்களின் அண்மையுடைய கூட்டமே வாக்கியமென்று தர்க்கத்தில் கொள்ளப்படும். -ஈண்டுக் கூட்டம் ஞானவிடயமாகும்.

இவ்வாறு பதமும் எழுத்துக்களின் கூட்டத்தால் அமையுமெனினும், எழுத்துக்கள் உச்சரிப்பில் விரைந்து கெடும். ஒருங்கே அநேக எழுத்தனுபவம் உண்டாகாது. ஒரு பதத்தின் முதலெழுத்தை அநுபவித்து ஈற்றெழுத்துக் கேட்குங்கால் முதன் முதலெழுத்து அநுபவத்தாற் பிறந்த வாசனையோடு கூடிய ஈற்றெழுத்தோடு பொருந்திய பதத்திற் கமைந்த பொருள், சக்திகிரகித்தலால், சகாயத்தைப் பெற்ற செவிப்புலனால் ஒருங்கே சதசத்தான பலவெழுத்தை யகப்படும் பதவுணர்வு தோன்றும். இத் துணைவலியால் "அந்த யானை இது" என்னும் பிரத்யபிஞ்ஞாரூபப் பிரத்தியட்சம்போல (பிரத்தியபிஞாநம்போல்) பிரத்தியாபிஞாநக் காட்சியில் அதீதமாயும் முன்வாசனைதோன்றும். அதனால், முதன்முதற் பதாநுபவத்தாற்றோன்றிய வாசனையோடுகூடிய ஈற்றுப் பதவிடயச் செவிப்புலனாற் சதசத்தான பலபதத்தை அகப்படுக்கும் வாக்கியஞானம் உண்டாம். இவ்வாக்கியம் ஆப்தமகனாற் கூறப்படின் அது சப்தப்பிரமாணமாம். அதற்குப் பலம் வாக்கியப் பொருளுணர்வு-இச் சப்தப்பிரமாண விலக்கணம் உலகினும் வேதத்தினும் பொது. உலகத்தில் இது விசேடம். ஆப்தனுவான் ஏகதேசம் - யாவருமல்லர், ஆகலின், உலக வாக்கியத்தில் சிறிதே பிரமாணம். வேதத்

தில் பரமாப்தனுன ஸ்ரீ மகேசனுற் கூறப்பட்ட வாக்கியமெல்லாம் பிரமாணம்; அவை ஆப்தவாக்கியம்:—

வேத மாயவிண் ணேர்கள் தலைவனை
ஓதி மன்னுயி ரேத்து மொருவனைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே.

நீதி யாற்றெழு வார்கள் தலைவனை
வாதை யான விடுக்கும் மணியினைக்
கோதை வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே.

திருக்கோளிலி - திருக்குறுந்தொகை. 708

(ix) பதப்பிரயோக வழக்கு.

பதங்களைத் தர்க்கத்தில் பிரயோகிப்பதில் இக்கலைக்குச் சில மரபுகள்உள. அவ்வழக்குக்களைப் பல நாமங்கள் கொண்டழைப்பர். அவற்றில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியன:—உபசாரம், அநுவாதம், குணவாதம் பூதார்த்தவாதம், (சித்த பரவாக்கியம், காரிய பரவாக்கியம்) என்பன.

உபசாரம்.

ஒன்றன் தன்மையை மற்றொன்றின்மேல் ஏற்றிக் கூறுவது உபசாரமெனப்படும்.

பண்டோத் தமொழி யாளையோர் பாகமாய்
இண்டை செஞ்சடை யன்னிருள் சேர்ந்ததோர்
கண்டத் தன்கரி யின்னுரி போர்த்தவன்
அண்டத் தப்புறத் தானன்னி யூரனே.

திரு அன்னியூர் - திருக்குறுந்தொகை 2.

கேட்பவனுக்கு ஒன்றற் கொன்றுள்ள அவாய்நிலையைத் தோற்றுவிக்கும் பதங்களின்மேலேற்றிக் கூறினமை காண்க. அல்லது என்றொருபசாரம் கூறுமிடத்துப் பதங்களை பொருளைக் கூறுவதன் வாயிலாக அதன் வேற்றுமை விஷய அவாய்நிலையைத் தோற்றுவித்தலின் அதுகாரணமாகப் பதங்களும் அவாய்நிலையனவென் றுபசாரமாகக்கூறப்படுகின்றன. அவாய்நிலைப் பொருள்களை கொண்டுகூட்டலாகிய (அன்வய) யோக்கிய முடையனவா யிருத்தலின், அப்பொருள்களின் வாயிலாகப் பதங்களும் அவாய்நிலையனவென்று உபசாரத்தால் கூறுவதுண்டு.

வாக்கியங்கள் மூவகை. அவையாவன: விதிவாக்கியம் (Categorical positive statements) நிஷேத வாக்கியம் (negative statements) இவ்விரண்டிற்கும் வேறுய வாக்கியம் அர்த்த வாதமாம். ஸ்துதி, நிந்தை ஆகிய இரண்டினுள் ஒன்றை யறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாதமெனப்படும். அது அநுவாதம், குணவாதம், பூதார்த்தவாதமென மூவகையாகும்:—

அன்னியப்பிரமாணத்தாற் சிந்தித்த அர்த்தத்தைக் கூறும் வாக்கியம், அநுவாதம் எனப்படும். சிவபெருமான் திருவடி, உற்றுரிலாதார்க்கு உறுதுணையாவன; (அவை) அற்றூர்க்கு அரும்பொருள்" என்றுரைப்பது போல்வதாகும்.

உற்று ரிலாதார்க் குறுதுணை யாவன ஓதிநன் னூல்
கற்றூர் பரவப் பெருமை யுடையன காதல்செய்ய
இற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கும்
அற்றூர்க் கரும்பொருள் காண்க வையாற னடித்தலமே

திருவையாறு - திருவிருத்தம் 13.

அன்னியப் பிரமாணத்திற்கு விருத்தமாகிய அமைப்புடைய அர்த்தத்தைக்குணவாயிலாகத் துதிக்கும் வாக்கியம் குணவாதமாகும்:—(உ-ம்)

படுகுழி பவ்வத்தன்ன பண்டியைப்
பெய்த வாற்றல்
கெடுவதிப் மனிதர் வாழ்க்கை
காண்டொறுங் கேதுகின்றேன்"

திருஆரூர் - திருநேரிசை 1.

தேனைப் பாலினைத் திங்களை ஞாயிற்றை
வான வெண்மதி சூடிய மைந்தனை
வேணி லானை மெலிவுசெய் தீயழல்
ஞான மூர்த்தியை நான்மறக் கிற்பனே.

மறக்கிற்பனே என்னும் திருக்குறுந்தொகை 5.

[குணத்தின் சமத்தன்மையால்துதிப்பது குணவாதம்]

தனது அர்த்தத்திற் பிரமாணமுள்ளதாய் இலக்கணையினுலே அமைக்கப்பட்ட அர்த்தத்தின் மேன்மையைக் கூறுவது பூதார்த்தவாதமாகும். "வச்சிர ஹஸ்தன் புரந்தரன்" என்பன போல்வன. அப்பர் தேவாரத்தில் கீழ்வரும் பாசுரம் மற்றுஞ் சிறந்த உதாரணமாகும்:—

பிரமன் மாலறி யாத பெருமையன்
தரும மாகிய தத்துவ னெம்பிரான்
பரம ஞூருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே!

திருப்பாண்டிக் கொடுமுடி - திருக்குறுந்தொகை 2.

மேற்கண்ட வாக்கியங்கள் யாவும் சித்தபரம், காரிய பரம் என்னும் இருவகை யுட்பிரிவுகளிலு மடங்கும். சித்திக்கப்பட்ட, அதாவது பெறப்பட்ட அர்த்தத்தைக் கூறும் வாக்கியம் சித்தபரவாக்கியம். "மலர்ந்த தாமரைக்கண் வண்டுளது; வச்சிரக்கையான் புரந்தரன்" என்பன போல்வன.

முண்டத்திற் பொலிந்திலங்கு மேனி யானே
முதலாகி நடுவாகி முடிவா னனே!
கண்டத்தில் வெண்மருப்பின் காறை யானே
கதநாகங் கொண்டாடுங் காட்சி யானே!
பிண்டத்தி னியற்கைக்கோர் பெற்றி யானே
பெருநிலநீர் தீவளியா காச மாகி
அண்டத்துக் கப்பாலா யிப்பா லானே
அவனுகி லதிகைவீ ரட்ட னனே.

திருவதிகை வீரட்டானம் - அடையாளத் திருத்தாண்டகம் 3.

செய்பவேண்டுவதைக் கூறும் வாக்கியம் காரிய பரவாக்கியம் எனப்படும். அது வேதவாக்கியமென்றும், உலகவாக்கிய மென்றும் இருவகை.

வேத வாக்கியம்

கொல்லை யேற்றினர் கோளர வத்தினர்
தில்லைச் சிற்றம் பலத்துறை செல்வனர்
தொல்லை யூழியர் சோற்றுத் துறையர்க்கே
வல்லை யாய்ப்பணி செய்மட நெஞ்சமே.

திருச்சோற்றுத்துறை - திருக்குறுந்தொகை 1.

உலகவாக்கியம்

ஓது பைங்கிளிக் கொண்பா லமுதூட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே!

திருமருகல் - திருக்குறுந்தொகை. 4.

சத்துவம், இராஜசம், தாமசம் என்னும் முக்குணங்கள் மாறிமாறி வருதல் இயற்கையாதலால், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயிலாயும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கேட்டுப் பொருள் நண்பர் வாயினும், ஒவ்வோரிடத்திற் கேட்கப்படுவதாயிருத்தலின், உலக வாக்கியத்தில் சிறிதே பிரமாணமென முன்னரே கூறப்பட்டது. பரமாப்தனுன ஈச்வரன் சர்வஞ்ஞனயிருத்தலின் அவனிடத்து எவ்விஷயத்திலும் ஐயந்திரிபில்லை; இல்லையாயின் அவனுற் கூறப்பட்ட வேத வாக்கியம்யாவும் பிரமாணங்களேயாம். பிறராற் கூறப்பட்டநூல்களுள் வேதத்திற்கு விரோதமாகாம லுள்ளனவே பிரமாணங்களாம்.

மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கை போய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லிரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே.

திருப்புள்ளிருக்கும்வேளூர் திருக்குறுந்தொகை 2

(சப்தப் பிரமாணம் முற்றிற்று.)




சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெகுதி

நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை சென்னை.



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரஸ்.

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
டாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி

பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்



ஏமாங்கத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம். வேளாளர் வீதி. புரசைவாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:—** அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:—**(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:—**(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:—**(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:—**(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:—**வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:—**(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

### 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:—** அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:—**(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:—**(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:—** உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:—**(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஷாரோ நாடகம்:—** ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:—**(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:—**(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:—**(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:—**(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.




# வர்த்தமானம்

ஸ்ரீ மதன்மோகன் மாளவியாவையும், அவருடன் கைது செய்யப்பட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் 75 பேர்களையும் அரசாங்கத்தார் விடுதலை செய்துவிட்டனர் என்று அலகபாத் செய்தி கூறுகின்றது.

***

இந்திய அரசியல்முறை விஷயமாய்த் திட்டங்களைச் செய்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட சர்வகட்சி மஹாநாட்டுக் காரியக் கமிட்டி, மே மாதம் 23ந்தேதியன்று லண்டனில் கூடும் என்று கூறப்படுகிறது.

***

இந்நாள்வரை ஹிருதயநோய் வந்தால் அதை நிவர்த்திக்க முடியாதென்று கூறப்பட்டுவந்தது. இதயமே கிழிந்துவிட்டாலும் அதைச் செப்பனிட்டுவிடலாம் என்று இங்கிலாந்தில் ஒரு வைத்தியநிபுணர் கூறுகின்றார். சமீபத்தில் அவர் ஒரு பையனின் கிழிந்துபோன இதயத்தைத் தைத்து அவனைக் குணப்படுத்தி விட்டாராம்.

***

மனிதர்களில் சிலர் புத்திசாலிகளா யிருப்பதற்குக் காரணம் ஹார்மொனஸ் என்னும் ஒரு வஸ்து ரத்தக்குழாய் மூலம் மூளைக்குச் செல்வதால் என்றும், அவ்வஸ்து குறைவடைந்தவர்களே முட்டாள்களாய் இருக்கின்றனர் என்றும் இவ்வஸ்துவைத் தரும் ஒரு மருந்து இப்பொழுது இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதென்றும் தெரிகின்றது.

***

பிரிட்டிஷ் அரசாங்க முதன்மந்திரி ராம்ஸே மாக்டொனல்ட் சிலகாலமாகச் சுகவீனமாய் இருந்துவருகின்றார் என்றும், சமீபத்தில் அவரது கண் சீர்கெட்டதென்றும் எனவே அவர் தமது மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்யலாம் என்றும், அப்பதவியை ஸர் ஜான் ஸைமன் பெறலாமென்றும் இங்கிலாந்துச் செய்தி கூறுகின்றது.

***

மேமாதம் 9ந்தேதியன்று மைமன்சிங் என்னுமிடத்தில் கன்மழையும் சுழற்காற்றும் அடித்தன. காற்றின் வேகத்தால் அவ்வூர்ச் சிறை இடிந்துபோயிற்று. அச்சிறையில் 1200பேர் கைதிகளாயிருந்தனர். ஜெயில் உத்தியோகஸ்தர்களிற் சிலரும் கைதிகளிற் பலரும் புதையுண்டனர் என்றும் அநேகர் காயமுண்டனர் என்றுந் தெரிகின்றது. மைமன்சிங்கில் பல வீடுகளும் காற்றினால் சேதமாயின என்று கூறப்படுகின்றது.

***

சமீபத்தில் ஜினேவாவில் கூடிய சர்வதேச சங்கத்தில் வியாபார ஸ்தலங்களிலும் கைத்தொழிற் சாலைகளிலும் வேலைசெய்யும் சிறுவர்களின் வயது விஷயமாய் ஒரு முடிவு செய்யப்பட்டுளது. கைத்தொழிற் சாலைகள் தவிர மற்ற விடங்களில் 14 வயதிற்குட்பட்டவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் படலாகாதென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் இந்தியாவின் நிலையை உத்தேசித்து இங்கு மாத்திரம் வேலை வயது 10 ஆகத் திருத்தப்பட்டது என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

மீரத்து கவர்ன்மெண்டு பாடசாலையில் நாவலிக் என்பான் 7-வது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வயது 16 இருக்கும். இம்மாதம் முதல் வாரத்தில் நாவலிக் என்னும் மாணவன் பரீக்ஷை எழுதிவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டான். அப்பொழுது ஹாலேன்என்னும்பட்டாணிய வகுப்பினன் நாவலிக்கின்மேற் பாய்ந்து கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். கொலைசெய்தவன் வயது 20 இருக்கலாம். இக்கொலைக்குக் காரணம் விரோதம் என்றுதெரிகின்றது. கொஞ்சம் நாட்களாகவே கொலைசெய்தவன் இரண்டு உபாத்தியாயர்களையும் நாவலிக்கையும் கொலை செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தானும். போலீசார் அவனைப் பிடிக்க முயல்கின்றனராம்.

***

இந்தியாநிலை:—சென்றவாரம் கூடிய பார்லிமெண்டு சபைக் கூட்டத்தில் இந்தியாவின் நிலைமைபற்றி இந்தியா மந்திரியான ஸர். சாமுவல் ஹோர் பேசியதாவது:—பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும், பார்லிமெண்டு சபையினரும், இந்தியாவில் அரசியல் முன்னேற்றம் ஏற்படுவதற்கும், அமைதி ஏற்படுவதற்கும் முயன்று வருகின்றனர். அரசியல் முன்னேற்றம் இல்லாமல் அமைதி ஏற்படாதென்பதை யாம் அறிவோமாயினும் அம்முன்னேற்ற முயற்சிக்கு அமைதிநிலை அவசியம் என்பதை எவரும் மறுக்கவொண்ணாது. இந்திய அரசியல்பிரச்னையோ மிகவும் கடினமானது. அப்பிரச்னையைஏற்று ஒருமுடிவு செய்வதற்கு அமைதிநிலையும் இந்தியர் கூட்டுறவும் மிகவும் இன்றியமையாதன. இந்தியாவில் தற்போது ருஷியக்கொடுங்கோன்மை நடைபெறுகின்றதெனச் சிலர் கூறுகின்ற கூற்றை நான் மறுக்கின்றேன். மிஸ்டர் லான்ஸ்பரி இந்திய அரசாங்கத்தின்மீது குறைகூறுகின்றார். அவர் சென்ற தொழில்கட்சி யாசாங்கத்தில் அங்கத்தினராய் இருந்தபொழுது இப்பொழுது இந்தியாவில் சிறையில் இருக்கின்றவர் தொகையைக் காட்டிலும் இரண்டுமடங்குச் சனங்கள் சிறையிலிருந்தனர் என்பதை நான் அவருக்கு ஞாபகமூட்டுகின்றேன்.

அவசரச் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன வென்றும், போலீசார் சட்டமீறிய வழியில் நடந்துகொள்கின்றனர் என்றும் புகார் செய்யப்படுகின்றது. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களையும் பிரிட்டிஷ் ஆட்சியையும் தூஷிப்பதற்கென்றே சிலர்சேர்ந்து இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் பொய்ப்பிரசாரம் செய்துவருகின்றனர். அவசரச் சட்டங்கள் நேரிய வழியிலேதான் பிரயோகிக்கப்படுகின்றன. இந்திய அரசியல் வளர்ச்சியே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை. இக்கொள்கையினின்று பிரிட்டிஷ் அரசாங்கம் பிறழாது. அமைதிக்குரிய காரியங்களும் செய்யப் பெறவேண்டும்.


வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5 மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்

இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1

5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனாம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

## — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரிபேர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனோல் கவர்களும், திம்பிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

7-வது வருடம்! 7-வது வருடம்!!

## அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஒரே ரூபாய் சந்தாவில் 64 பக்கங்கள்.

எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப் பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 64 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனம்.

புரொப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS

covered by
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)